786

பிஸ்மில்லாஹிர்ரஹ்மான் நிர்ரஹீம்

# மக்க நாடகம்.

புதுநகரம்
செ. காட்டுவாருவுத்தர் குமாரர்
ஹாஜி வித்துவசிரோன்மணி
முகம்மது அசன்புலவர்அவர்களால்
முன்காலத்தில் இயற்றப்பட்டதை
ஷை யாரின் பௌத்திரர்.
**செ. கா. முகம்மது அசன்ருவுத்தரின்,**
வேண்டுகோளுக்கிணங்க.

T. S T. முத்துகோயாதங்கள்.
A. V. R. முகம்மது அப்துல் அசீஸ்ருவுத்தர்.
A. M. R. முக்ம்மதுமைதீன் ருவுத்தர்.
ஆகிய இம்மூவ்வரின் பொருளுதவியால்.

பாலக்காடு சுலுத்தான்பேட்டை
விக்டோரியாபிரசில்
பதிப்பிக்கப்பட்டது.

1925.

விலை அணா 6

...மக்காமதீனாசென்று வருமளவும் உள்ள
...கள் அடங்கிய மக்கநாடகம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 DEC 1925
MADRAS

Q7
N25
180899

180899
சென்னை-600 008.

# விளம்பரம்.

இதனால் சகல கனவான்களுக்கும் தெறிவிப்பது யாதெனில் இச்சிறப்புவாய்த்த மக்கநாடகம் என்னும் புத்தகமானதை அடியில்கண்ட விலாசத்தாரிடமும் புத்தகவியாபாரிகளிடமும் பெற்றுக் கொள்ளலாம். தவிர இந்த புஸ்தகத்தில் சில பாகங்களை கூட்டியோ குறைத்தோ அச்சிடக்கூடாதென்றும் அப்படி அச்சிடுபவர்கள் என்னுடைய நஷ்டத்திற்கு உத்திரவாதியாவார்களென்றும் இதினால் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

இங்ஙனம்,

A. V. R. முகம்மது அப்துல் அசீஸ்ருவுத்தர்,

மேலத்தெருவு, புதுநகரம்.

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

# மக்க நாடகம்.

## கடவுள் வாழ்த்து.

ஆதிபாயகதா யருவுருவிலதா
யந்தமுமுடிவு மிலாதாய்
அணுவினுக்கணுவா யெழுவகைத்தோற்றத்தி
யாவனுங் கலந்துறவாடி
நீதியாய்நெறியாய் னிமலனாயெங்கும்
நிறைந்தாசானா மெய்ப்பொருளாய்
நின்குதரத்தா லமைக்கவுமளிக்கவு
நீயலால் வேறுமற்றுளசோ
சோதிமாமுதலே துணையிணையிலானே
துன்பமு மின்பமுமிலானே
சுத்தனே கத்தனே யென்றுந்
துய்யனே உய்புமாதவனே
ஓதியபுகழ்வகை துகையறியேன்
உன்னடியேன் பிழைபொறுத்து
உதவிதந்தருள இதுவுமொருசமய
மொருபொருளா முதலோனே

அன்னையும்நீயே அத்தனும்நீயே
ஆருயிர்த் துணைவனும்நீயே
அருமறைப்பொருளாய் வருபவநீயே
ஆதியுமனாதியும் நீயே
மன்னனுநீயே மறையொளிநீயே
மகாதவத்துரைபொருள் நீயே
மானிலத்துயிர்க ளியாவையுங்காத்து
வளர்ப்பதும் நீயலாதிலையே
உன்னையான்றுதிக்க வகையறியேன்
ஒன்றிலுமடங்கிடாப் பொருளே
உந்தனைநினைந்து சிந்தனைசெய்வோர்க்
குன்னருள்புரிவது நிசமே

இன்னமுமுனது கிருபைசெய்திடுவாய்
ஏழையென் பிழையெல்லாம்பொறுத்து
இரங்கியேரக்ஷித் தாள்வதுசமயம்
என்னையாண்டருள் ரஹ்மானே.

விருத்தம்.

அனைத்தும்படைத்தாளுகின்ற ஆதிரஹமானே
உனைப்புகழ்ந்துபோற்றி யுருகியேகேட்கும் தவா
எனக்குதவிசெய்தருள்வா யென்கோனே ரஹீமே
நினைத்தபடிநாட்டமதை நிறைவேற்றுவா யிறையே.

அல்லும்பகலு மனுதினமுமக்காநகர்
செல்லவென்றுநாடியென் சிந்தைமிகுவாடுகிறேன்
எல்லைதனிலெண்ணியெண்ணி யிருக்கிறேனென்கோவே
நல்லுதவிசெய்து எந்தனாட்டம் நிறைவேற்றுவாயே.

தரு. பல்லவி.

நாட்டப்படியெனக்குதவிசெய்வாய் நல்ல
நய ஜெய குண ஜெய (நாட்டப்படி)

அநுபல்லவி.

நாட்டப்படியெனக்கருள்புரி
நாயகனே துய்தானவனே யுனைக்
கேட்டபடி யெனக்குதவி செய்தருள்புரி
கிருபைசெய்திடும் றஹமான்றஹீமே என் (நாட்ட)

வானும்புவியு மலைகடலு மதிகதிரும்
மலக்குகள் மனுஜின்னும் நலக்கமுடனேபடைத்
தானே பலவுயிர்க்கு மிரணங்கொடுத்தாட்சித்
தாளுமிறையே யுனை நாளும்பணிந்திடவே. (நாட்ட)
அன்னைதந்தையுமிலான் றன்னைநிகருமிலான்
அச்சமோடிச்சையிலான் பட்சம்வைத்
தென்னைக்காக்கஉனையல்லா தொருவர்பின்னுமெனக்குளதோ
ஒருபொருளே உனதுகிருபை செய்தருள் எந்தன் (நா)
அல்லும்பகலுமெந்தன் சொல்லுங்கியலுங்கூடி
ஆசைபெருகிவாடி நேசமதுறவாடி

அல்லஹுவர்நபுசைக் கொல்லும்படிமல்லாடி
வாகாய்மணிமந்திரம் சாகும்பொழுதுதவி (நாட்ட)
அடியேன்பாவிநான்வெகு கொடியபிழைசெய்தாலும்
அலையாமலேதற்காத்து கலிமாநாவினில்தந்து
முடிவுக்காலத்திலெமன் வரும்போது எந்தன்
மொழிகள்குளறிடாமல் விழிகள்பதறிடாமல் (நாட்டா)
மக்கந்தனில்செல்லவும் ஹக்கன்பைத்துல்லாவை
வணங்கிதபாபுசெய்து இணங்கிஹஜ்ஜுமுடித்து
மிக்கமதீனுநகர் சொர்க்கநபிபதத்தை
விரும்பிபணிந்தடிமை திரும்பிப்பதிவர (நாட்ட)

காப்பு சதகம்.

விண்ணுமண்ணுமகா வெற்பும்உப்புங்கண வெண்டிங்களிரவியுநீ, மேலான அருசோடுகுருசுநீசொர்க்கமொடு மிக்கப்பற்பலவுயிரும்நீ, கண்ணும்கருத்தும்நீ கமலாசனத்தும்நீ காரணத்துறைபொருளுநீ, காண்டகாப்பொருளும்நீ ஆண்டுகொண்டருளநீ காக்ஷிதந்தாளும்நீயே, எண்ணும்எழுத்தும்நீ இலக்கணமியக்கியத்தியல்புதொடையடிதளையும்நீ, ஏகனீ பாகனீ போகனீ வாகனீயென்பிழைபொறுத்தாளும்நீ, மண்ணுலகெலாம்புகழ் புதுநகரில்வாழ்வுறு முஹம்மதசன் ஹாஜியென்போன், மக்கநாடகமிதை மிக்கதமிழால்பாட வல்லவா காப்பு நீயே.

தரு. தோடயம்.

தனன தனதனதன தனனதனதனனு தனனுதன னதன.
அருவுருவிலாத விறையோனே மறையோனே ரப்பில்
ஆலமீனே அர்ரஹமானிர்ரஹீ மென்போனே
கருவுருவிலாத பெருங்காரணனே பூரணனே
காத்தரிந்தவரவர்க்குக் கருணைசெயுங்கோனே
வருமொரு னுக்தானதிமேலே திருவுருவதாயிருந்து
வாழுமிறையோனே யுனை நாளும்பணிவேனே.
நெறிமுறைகள்தவறாத குருவிறசூல் நபிபதத்தை
நெஞ்சினில்வைத்தனுதினமும் அஞ்சலிசெய்வேனே
சொர்க்கங்களாளுமெங்கள் தூயமஹமூநபி
சுந்தரபொற்பாதமிரண்டும் சிந்தைவைத்துப்பணிவேன்

மிக்கஅபூபக்கருமரோடு உதுமானலியார்ஈவந்த
னசனுசைனிவர்கள்மென் பாதம்பணிவேன்.
தக்கஅபூசாலிஹறுள் சொர்க்கமுஹையத்தீன்பதத்தை
தாட்சிசெய்தென்னாளும் ஏத்திப்புகழ்வேனே.
மொய்க்கும்நாகைநகர்வாழ் தக்கஷாஹுல்ஹமீதை
மென்பாதமென்னும் வேண்டிப்புகழ்வேனே.
இக்குமொளியான அம்பியாக்கள் அவுலியாக்கள் அஸ்ஹாபிகள்
தன்னிருபதத்தைப் போற்றிப்புகழ்வேனே.
அற்பசலமானதுவை உற்பனமாதாகவன்னை
கெற்பமதிலாக்கி யுருவாக்குமிறையோனே.
இப்புவியிலேபிறந்து நற்பதவியாய்வளர்ந்து
என்னைமதித்தேயிருந்து உன்னைமறந்தேனே.
பற்பலசொல்லாலுஞ் செயலாலுமடியேன்செய்த
பாவமதுபொறுத்து ரக்ஷித்தாளுமிறையோனே.
அற்பசுகத்தைவிரும்பி கற்பனையெலாந்தவிர்ந்து
அடிமையெந்தன்பிழைபொறுத்து முடிமைதவிர்ப்பாயே.
மக்கமதீனாவிற்சென்று ஹக்கனருளால்மீண்டு
வந்ததுவும் போனதுவும் செந்தமிழால்பாட
திக்குத்திசையோர்புகழும் மிக்ககவிவாணர்முன்னே
சிறியேனுறைத்தபுன்சொல் செஞ்சொலாகக்கொள்வீர்.
மிக்கபிழைபொறுத்து நற்கவிதையாக்கியருள்
மேலவனேயென்னை ரக்ஷித்தாளுமிறையோனே.
தக்கபெரியோர்சிறியோர் மிக்கசபையோர்முன்னே
தானுமிதைப்பாடலுற்றேன் நானுமினிபோலே.

## சதகம். விருத்தம்.

மன்னர்நபி ஹிஜிரத்தாயிரத் திருநூற்றி
வருமுறுதொண்ணூற்றேழாண்டில்
வரிசைபெரும் றம்லான்நோம் பிறுதியினில்
மானிலத்தோர்கள் புகழ
மின்னிலத்தரியதோர் கொல்லம் ஆறுயிரத்
தம்பத்தி யாறுனதில்

இயலான சிங்கமொரு நாலேந்து
தெய்தியிலேகினேம் மக்கநாடி
தன்னேநிகரிலாத ஒரு பொருளாமுதவியால்
தான்சென்று மீண்டதுவெல்லாம்
தாரணியில் விசுவருஷம் ஐப்பிசை மூவைந்திலே
தானுமொருகதையிதாக
வன்னமிகுபுதுநகரில் வாழ்வுறுங்காட்டுவா மைந்தன்
ஹசன் ஹாஜி யென்போன்
மக்கநாடகமிதை மிக்கதமிழால்பாட
வல்லவா உதவி தருவாய்.

சீரானகொல்லம் ஓராயிரத்தம்பத்தே ழாண்டினில்சிறந்த, செப்புமொருமாதமது மகரம்இருபத்தைந்து செய்யபுதுநகரில்வாழ்வோன், பேரானவாழ்வுடைய காதர்மீருருவுத்தர் பெற்றிடுமைந்தர்தனிலே, பிற்பலமதாகிவளர் சாஹிபுருவுத்தர் தன்பேரில்சிறந்தபூபன், தேருருதவாழ்வுடைய மாமுனைஞருவுத்தர் தோன்றல் காதர்சாருவுத்தர்தான், சுந்தரம்பெருகிவளர் மைந்தனும்சாந்துருவுத்த ரென்றமகிபன், பாரதனில்புகழ்கின்ற மக்கநாடகமிதைப் பாடியேஅரங்கியற்றி, பண்பாகவாணர்க்கு மிக்கபெருநீதிகள்பல பணிகளணிதூசுமே, ஏர்மிகுந்திடுமிந்த மக்கநாடகமதை இயல்பானசபைபுகழவே, இன்பமுடனேபடித்தேயரங்கிய எங்கள்மனமகிழ்வாக, தாரணியிலேகொடை கொடுத்தஇருபேர்கள்தான் சாஹிப்ருவுத்தரும், சாந்துவாருவுத்தரும் சங்கையிறையருள் பெருகிஷபா அத்திலாகிநாளும், பெருகஇருபதியிலும் கிருபைமென்வேலும் பெற்றுவாழீர், பிரிசமுறுமனேவியர்கள் மக்கள்மருமக்களும் பின்னுமவர்சுற்றமுடையோர், மாருதவாழ்வுடைய தீனிலமையோங்கி மைந்தர்பதினறும்பெற்று, மானிலத்ததிகபலன் பவுசுகள்பெருகியே வாழ்கநீடூழிவாழ்க. ஆமீன்.

விருத்தம்.

இந்தநாடகத்தைநன்ருய் இயல்புடன்பாடினேரும்
விந்தையாய்ப்படித்தபேரும் மிகுகொடைகொடுத்தபேரும்
சிந்தையில்மகிழ்ந்துநன்ருய் இன்பமுடன்கேட்டபேரும்
எந்தநாளினுமேயாளும் இறையருள்பெருகிவாழீர்.

சந்த விருத்தம்.

மன்னறசூல்நபிதீனே வளர்க்கும்விருப்பாமறைதனிலே
சொன்னபடியேநடப்பவர்க்கு துன்பமகலுமின்பமெய்தும்
இன்னலகற்றியெழில்மிகுந்து இறையோன்தனதுகிருபயுண்டாய்
பொன்னின்பதிமக்கமாநகர்போய் நாம்வருவோம் புறப்படுங்கள்.

மக்கநகர்க்கேகவென்று வருஷமூன்ருய்மனம்நாடி
மிக்கதுணைவரில்லாமல் மிகுந்ததுயரமாகினனே
தக்கஹஜ்ஜுல் அக்பர் தானிவ்வருஷமாகையினுல்
ஒக்கசூழவேபோய்வருவோம் உடையோன்மிக்ககிருபசெய்வான்.

தரு கல்யாணி.

பல்லவி.

போவோம்நாம்வாரீர்-தீனேர்களே-போய்வரலாமே
மக்கநகருக்கு போய்வரலாமே (போவோம்)

அனுபல்லவி.

போவோம்துணைவரோடே புகைவண்டிறயிலேறி
ஆவதழிவதெல்லாம் அல்லாஉன்பாரமென்று (போவோம்)
றயிலேறியேசென்று நகர்களெல்லாம்கண்டு
மயில்வேளையாம்போது வந்தோரிடத்திறங்கி (போவோம்)
பம்பாய்நகரில்சென்று மிக்ககப்பலோன்றனேகண்டு
அன்பாகவேகண்டு அடுத்துச்சீட்டுகள்வாங்கி (போவோம்)
கப்பல்தனிலேசென்று காரணம்பலகண்டு
ஒப்புடனேஎல்லோரும் ஒன்ருகப்போய்வருவோம் (போவோம்)
விதனமொன்றணுகாத மேலோனுதவியினுல்
அதனிக்கரையில்சென்று அடுத்தப்புறம்செல்ல (போவோம்)
மக்கநகருக்கே வருவோர்களுடன்கூடி
மிக்கதுணைவருடனேமிகுந்த தவங்கள்செய்ய (போவோம்)
கனமாம்சுக்கு சிருவைக்கடந்துபின்மகாவாதல்
இன்பமுடன்கடப்பதற்கேகனுதவிசெய்வான் (போவோம்)
உதைதாகடந்துபின்னும் ஓடிசகர்முகல்லா
இதுதான்லம்லம்மென்ருல் ஏகியிஃறாங்கட்டி (போவோம்)

போர்ஸித்தைநகரிறங்கி பத்தமதைமுடித்து
மத்தநாளில் ஒட்டகங்கட்டிவழிநடந்து (போவோம்)
மக்கந்தனில்சென்று ஹக்கன்பைத்துல்லாவை
வணங்கிதவர்புசெய்து இணங்கிஹஜ்ஜை முடிக்க (போவோம்)
அதினவழிநடந்துமதீனுநகரில்சென்று
ஆலநபிறவுலாசீலமுடன்தெரிந்து
கதிபெறவேமன்றுடிப் பதியில்திரும்பிவர
ஹக்கன்கிருபைசெய்வான் ஒக்கல்சூழவே (போவோம்)

விருத்தம்.

மன்னு உன்துகிருபை மிகுந்திடும் மக்கநகர்
என்னுளிலென்கண்ணில்காண்பனென்றே மனதிலெண்ணியெண்
முன்னுள்விதித்தபடிபோலமுடியுமென்றுள்ளத்தெண்ணி [ணி
பின்னுல்விலக்கும்கலாவைத்தடுத்துப்புறப்பட்டேனே.

தரு.

ஆதாரம்நீயன்றிவேறில்லையே உன்னடியவர்கள்
வேதாமிகுந்தகிருபைசெய்வாயெந்தன்மேலவனே
தாதாமுஹம்மதர்ப்பாதத்தைப் போற்றிசுகங்கள்பெற
நாதாந்தமானபொருளேதுணையென்று நடந்தனனே.

தரு. இராகம் தொடை மடக்கு.

மக்கத்துக்கேகவென்று
மனதுநாடி, தினமுந்தேடி, இனமுங்கூடி
தக்கமுதல்கைக்கொண்டு
பக்கத்துணைவர்கள் சூழவேபுறப்பட்டோம்
ஹக்கன்கிருபையினுல் திக்குத்தீனவர்சூழவே
பாத்திஹாஓதி, நேர்த்தியதாக சாத்திரைபோய்சேன்றோம்
மிக்கமுதலியார் வீட்டிலன்றிரவில் [பாலக்காடதனில்
ஒக்கவிருத்துண்டிருந்தோம்
அன்றுபோய்மறுநாளில்
சென்றவரெல்லாம், நன்றாகவே, ஒன்றாய்க்கூடி ஒலவக்கோ
வெற்றியுடனேயிறங்கி [டாபீசினில்
கோயமுத்தூருக்குமிக்க டிக்கெட்டுவாங்கினோம்

வாங்கியங்கிருக்கையிலே
றயில்வண்டி மயில்வேளை ஒயிலாகவந்ததாபீசிடத்தில்
தாங்கியேமூட்டைகளும் சாமான்களும்
தாமுமதிலேறினேம்
ஓடியேசென்றதுகாண்
ஸ்டேஷனிலெல்லாம் நின்றுநின்று ஓடியே போத்தநூரில்
கூடிபிறங்கிமருறயிலேறி
கோயமுத்தூருக்குச்சென்றோம்
தேடியேவந்திருந்தார்
வந்தஜனங்கள் வந்ததறிந்து சீக்கிரமாயழைத்து
நாடியேகூட்டிச்சென்றார்
அவர்மனைநன்றாகச்சென்றிருந்தோம்
இருந்துமருநாளெழும்பி
கோயமுத்தூர்ஸ்டேஷனில்வந்துடிக்கட்டுவாங்கி யேறினேம்
பொருந்திடந்ததுகாண் [றயில்வண்டியில்
றயில்வண்டிபோத்தநூர்வழியாக
போத்தநூர்தனிலிருந்து
புறப்பட்டு திறப்பட்டு சிறப்புடன் போகுதேவேகமதாய்
ஏத்தஇறக்கமுள்ளதோர்
ஆபீசுகள் எத்தனையென்று சொல்வேன்
ஈரோடுதான்கடந்து
பொழுதடைந்து வழிகடந்து மளமளென்றேகினேம் சூசம
பேரானசேலம்விட்டு [ங்கலம்
திருப்பத்தூர் பின்னும் அப்புறம்போனதுவே
காராளர் பெருகிவளர்
வாணியம்பாடி நாணயந்தேடி பெங்களூர்விட்டு காரிசமாயோ
பேரான ஆற்காடு வேலூர்விட்டு [டியே
பின்னுமப்புறம் போனதுவே
கூரான இருட்டானதால்
சென்றவிடங்கள் நின்றவிடங்கள் ஒன்றுந்தெரியாது ஓடியே
சீரான ஆர்க்கோணத்தில் நாலுமணிக்கு [போனதுவே
சென்றங்கிறக்கினரே

இறங்கியே ஆப்பீசிடத்தில்
இருட்டுவேளை திருட்டுமெத்த மூட்டைகளெல்லாம் எடுத்து
சிறந்தநகறில் சத்திரத்திடத்தில் [க்கொண்டவ்விடம்விட்டு
சென்றங்கிறங்கினோமே

விருத்தம்.

இப்படிச் சத்திரத்தில் யிறங்கியங்கமுதுபொங்கி
செப்பமா பசிகளாறி சென்றபின்னிரவுகாலம்
அற்புதமணி எட்டாக ஆபீசில் சென்றுசீட்டு
நற்புடன் வாங்கியேகும் நவமதை உறைசெய்வேனே.

நொண்டிச்சிந்து.

ஆர்க்கோணந்தனிலேறி — அங்கிருந்து
அந்தியில் நடந்ததெந்தவிதம் சொல்குவேன்
பார்த்திடும் திசைகளெல்லாம் — இருட்டல்லால்
பட்டணமும் நாடுநகர் ஒன்றும்தெரியாது
சேர்ந்திடும் ஆபீசிலுள்ளவர்கள் — ஐயா
செப்புவாரப்பாஷை ஒன்றுந்தெரியாது
ஊர்ந்திடும் றயில்வண்டி — அதில்
மேலுள்ளவர்கள் ஒருவர்க்கொருவர்கள் பேச்சறியோம்
ஏறுவார் சிலசிலயேர் — ஸ்டேஷனில்
இறங்கிடுவார் சிலர்உறங்கிடுவார்
காரிருள் கூட்டமெல்லாம் — அங்கங்கே
கலைந்தடைந்தது நோம்விடிந்ததுவே
விடிந்தபின் நடந்தசேதி — அதில்கொஞ்சம்
விள்ளுவேன் வெகுசிதம் கொள்ளுவீரே
குத்திபல்லாரிகடந்து — ரத்னகிரி
கூடுதுரை கிஷ்ணாநதிதான்கடந்து
மத்திப்பாளையம்கடந்து — அத்திக்கறை
வாகாகவே கடந்துபோகையிலே
இனியும் பலவாபீசுகள் — அதின்பெயர்
இன்னவென்று சொல்லவுமே நானறியேன்
பனிறண்டுமணிசமயம் — ராய்ச்சூரில்
பாங்காகவேயங் கிறங்கினமே

இறங்கியேயங்கிருந்து — ஏறினேம்
வாடியூர் தனில்ச்சென்றோம்
சிறந்திடும் மறுநாளில் — ஹைதராபாத்
செல்லுமந்தவழி கடந்தப்புறத்திலே
அறந்தரும்குல்பருகா — காண்டியூர்
ஆச்சிநகருங்கடந்து போச்சுதையா
பலபல டேஷன்கடந்து — குஷாலாப்பூர்
பட்டணத்திலன்றிரவு இறங்கினனே
நிலமது வெளுக்குமுன்னே — றயிலேறி
நீக்கினன் நெருப்புகள் வீக்கினனே
காசிக்குப் போகும்வழியும் — கடந்துபின்
கல்கத்தாசெலும்வழி தான்கடந்து
தேசத்தில் பெரியதான — பூனுவில்
சென்றிறங்கினேம் பெருநாளன்றிரவிலே
பெருநாளங்கேயிருந்து — மறுநாள்
புறப்பட்டோம் பூனுஸ்டேஷனிலேறி
கரைபுரள்மகரமச்சங்கள் — அடங்கலுலவிய
கங்காநதி தான்கடந்தோம்
நிறவுநெற்பயிர்கள்பச்சை — முத்தாரி
நெட்டிலைபச்சிலைகளும் நிவர்ந்திருக்கும்
பாவியேகொளுவிஞ்சியும் — எலுமிச்சம்
மாதுளைபலபழம் பழுத்திருக்கும்
அந்தவிடந்தான்கடந்து — கல்யாணிக்
கப்புறத்தேபோகையிலே அடுக்கடுக்காய்
விந்தைவிந்தையாய் வெகுமலைகளை — நல்ல
வெகுசிதமாகவே துளைத்திருக்கும்
அதினுள்ளேறயிலோடி — போறதுவும்
அதிசயம் இதுவெங்கும் கண்டதில்லையே
இதுநல்லபுதுமையென்று — கண்டு
கண்டேகினேம் சித்தோராஸ்டேஷனதிலே
துரைமார்உத்தியோகரும் — வெகுபேர்
துருக்கெனகண்கள் விழித்திருக்கையிலே

விரைவாசங்கமழும் — பெம்பாய்
விண்டிபசார் ஆபீசினில் சென்றிறங்கினேம்
இறங்கியேபொம்பாய்நகர் — வெண்டிபஸார்
இசுமால்காசி மூசாபர்கானில்
இறங்கியங்கிருந்தோமே — அன்றிரவு
நேரம்விடிந்தபின்னே காசிமுல்லாவில்
சிறந்திடுமொருவீடு — வாடகைக்கு
சிறப்புடன்வாங்கியங் கிருந்தோமே
இருந்திடும்நாளையிலே — நடந்ததை
என்னவிதமென்றுநான் எடுத்துரைப்பேன் (தெந்தின)

விருத்தம்.

இந்தவிதம் பொம்பாய் நகரந்தனிலிருக்க எமதூர் மகுதூம் மற்றுள்ளோரும், வந்தவர்வரலாறைக் கேட்டுஎந்தன் மனைவிபரம்கேள்க்கையிலெம் மடியில்நின்றோர், விந்தைபெறகடலா சொன்றையளித்தார் அதைவிரித்தவிழ்த்துநன்றாய் பார்க்கும்போது, அந்தமதாய்என்மனைவிசாமுண்டாகி ஆகிறம்சேர்ந்ததுவிபறம் அறிந்திட்டேனே.

அறிந்தபின்னும்கடுதாசி பார்த்துப்பார்த்து
அழுதழுது அனலிலிடும் மெழுகதாகி
சொரிந்துகண்ணீரொழுகிஉள்ள முடைந்துவாடி
சோபமதாய்தரைதனிலே கிடக்கும்போது
அறிந்துதங்கையுடனும் சிலபேர்வந்தெய்தி
அழுதுகிடந்தவிபறமென்னைக்கேட்டார்
தெரிந்தெழுதும் நிருபத்தின் செய்தியெல்லாம்
செப்பினேன் அழுதகண்ணீரொப்பிலாரே.

சரு - இராகம் - பொன்னுகவராளி.

என்னசெய்குவேன் எதுசெய்குவேன் பெண்மயிலே நான்
இப்படிவருமென்றெண்ணி சொர்ப்பனத்தறியேன்
முன்னைநாளில் மன்னனிட்ட முறையின்வண்ணமே வந்து
முடிந்துதென் றலையில்வந்து விடிந்துதென்செய்வேன்
சின்னவயதில்கல்யாணம் செய்துமுடித்தே - யிந்த
செகதலத்தில்மனமகிழ்ந்து சேர்ந்துவாழ்ந்திருந்தோம்

என்னைவிட்டுநீபிரிந்தாய் ஏந்திழையாளே - பிதை
எப்படிப்பொறுத்திருப்பேன் கற்பனையென்றே
மண்ணறைப்புகுதும் வரலாறையானறியேன் - என்
மன்னவனறிவதல்லால் பின்னையாரறிவார்
கண்ணில்காணாதபாவி யாகினேனானும் - என்
காதலியேயுனைநினைந்து கலங்குதேசிந்தை
எண்ணியெண்ணியென்மனது உருகுதென்செய்குவேன்
எரியிலிட்டதளிரதுபோ லாகினேனிப்போ
புண்ணிலிட்டகாரம்போலு மாச்சுதுள்ளமே
பிணையிளந்தகலையதுபோ லாகினேன்நானே
மக்கத்துப்போறேனென்ற வார்த்தைகேட்டுநீ
மனமகிழ்ந்துநானும்கூட வருகிறேனென்றீர்
தக்கமிந்தசமயம்யானும் வருகிறேனென்றவார்த்தை
தடுத்துறைத்துகெடுத்துவிட்ட பாவியாகினேனே
மக்கள்மருமக்களுடன் வாழ்ந்திருமென்றேநான்
வழிநடந்தோரெட்டுநாளில் மாணமடைந்தீர்
துக்கமிதையெவரிடத்தில் சொல்லியாறுவேன் - வெகு
தூரஞ்சென்றுதிரும்பிமக்கள் முகத்தைக்காண்பேனோ
விதிவசத்தைஎவர்களாலும் விலக்குவார்களோ
வெந்துமனம்புண்ணாகி நொந்துவாடுதே
அதிகபாவபிழைபொறுத்தென் மனைவியாள்தனக்கே
உன்னருள்புரிந்துகிருபை செய்தாள்வாயிறையே
துதிபெரும்மக்காவில்சென்று தவாபுகள் செய்தே - என்
துன்பமகற்றியே ஹஜ்ஜ் தொழுதுமீளவும்
பதிபுகள்மதினநகர்வாழும் நபியே - அவர்
பாதம்போற்றி பாகதிதந் தாளுமிறையே

**விருத்தம்.**

வேதநாயகன்விதித்த விதிப்படிமுடிந்ததென்று
மாதவர்தம்மைக்கூட்டி மறைப்படிசடங்குசெய்து
தீதகலவிறையைப்போற்றி யென்சேயிழைபிழைபொறுத்து
ஆதரவுடனேகாத்து உன்னருள்செய்வாயருள்செய்வாயே.

என் றுநம்பிறையைப்போற்றி இருந்து சிலநாள்கழித்து
சென்றுபின்கப்பலோன் தன்னிடத்தில்சீட்டுவாங்கி
நன்றியாய்மக்கமேக நாடிப்பிரயாணமாகி
வென்றியாய்க்கப்பலேருமவிபரத்தையுரைசெய்வேனே.

கப்பல்தரு.

ஏலெலயேலோ யேலெலயேலோ தாத்தையார் ஏலெலயேலோ (ஏலெ)

ஏலமுடனினியதொரு கப்பலேறவென்று சாமானெடுத்துக் கொண்டு, சீலமுடன்தோணிதனிலேறி சிறப்பானநெருப்புக்கப்பலுசென்றோமே, சாலமுடன்கப்பலதுதனிலே இருக்கத்தாவளங்கள ங்கேபார்க்கையிலே, கோலமுடன்பலவிதமாய்ஜனங்கள் குறித்திருந்தாரிடங்களில்லாமல்.

முடுகு.

வாலிபர்களோடி சில்பாகமதுதேடி மைந்தரொடுதந்தையர்கள் மங்கைமறுமங்கை, பால்குடிமாறுதசிறு பாலகருமங்கே பாங்காய்நடந்து விளையாடும்சிறுமைந்தர், காலவயதறியாத கன்னியர்கற்பன்னி, கருதுமணவாளரொடு பருவம்சாய்ந்தோரும், சோலமதுதெரியாத குருடர்செவிடூமை குளறிமொழிசொல்கின்ற கிளவர்கிளவியரும், சாலமொடுபாய்சவுக்காளம்விரிபடமும் சங்கையுடனே விரித்தங்கிருந்தார்கள். (ஏலெ)

இப்படியேஒன்றுந்தட்டதிலே எங்களுக்கிருக்கஇடமில்லாமல், செப்பமுடன்இரண்டாந்தட்டதிலே நாங்கள் சிறந்தஓரிடம்பார்த்திருந்துகொண்டோம், துப்பரவாயங்கிருந்தபின்னேநாங்கள் தூக்கிவைத்தோம்சாமானெல்லாம், நட்புடனே அங்கிருந்தபின்னே நலமானகப்பல்சுத்திப்பார்த்தோமே.

முடுகு.

தப்பிதமலாமலுயர்கப்பலதினீளம் தாங்குமறைமயிலிலதிகதூரமுண்டும், ஒப்புடையகப்பலதினகலமதுசொல்ல ஒன்றுகமுப்பதுமுளத்தில்குறையாது, அப்பெரியகப்பலதினுயரமதுசொல்ல அம்பதுமுளமேகதேசமதினுயரம், இப்படியிருக்கின்றகப்பலதுதனிலே எற்றினன்பாய்மரங்கள்மூன்றுகொம்பாக. (ஏலெ)

பாய்மரங்கள்மூன்றாக்கி அதிமேல பரிமான்கயிறுகள் தோல்வடமாக்கி, நேயமுட்னதிமேலேறுகின்ற நல்ல நீள்வடமும்புரிவடமும் இரும்பாலே, சாபலுடன்நெருப்புப்புகை யெழும்பு மிரண்டுதாயக்குழலுமிரும்பாலே, காயமதிலுயிர்போலும் திருப்புட கனமான சக்கரான்கங்கூரங்களும, வாயலதனிமேலேறுகின்ற ஏணிவளர்களும் படிகளும்கரும்பொன்னாலே

முடுகு.

வங்கமதிமேலேற்றியிறக்கின்றசரக்கெல்லாம் வலிதானதூக்குமரம்போலே அதிலொன்று, சங்கிலிகள்நாலுபுறம்தூங்க அதைச்சுற்றும சாமானமேற்றும்விதம் என்னவென்றுசொல்லுவேன், தூங்கமுடனேநெருப்பிட்டெரிக்கும்பெட்டி தூய்தானதண்ணீர்கொதிக்கும்ஒருபெட்டி, எங்கெங்கும்சாமானிடங்கள்பொறுகாது ஏற்றினன்பாணிமுதல்கிடிகளோடே. (ஏலெ)

அந்தரமாயுயர்ந்திருக்கும் கப்பலணிஅறையும்பணிஅறையும், விந்தைபெறும்கலமறையும் நல்லவிதவிதமாய்சாயரங்குதீற்றிருக்கும், சொந்தமுடனகுதாதானிருக்க நல்லதுலங்குமொருமேடையுண்டும், வந்தஜனமனைவருக்கும்வலஞ்சலமறைகளது வெவ்வேறேதானுமுண்டும்,

முடுகு.

இந்தவிதமானதோர்கப்பலதுதனிமேல ஏறுனதாருவும் வாத்துவான்கோளி, சிந்தைநேரியல்பானகறவைமாடாடு செபமூறிஆடுகளுபசீமைமுயல்எலியும், பந்தமதிலாடும் கருமந்தி தேவாங்குபாங்கானபூமெருதுபஞ்சவர்ணங்கள், நந்தியுடன்மைனாவுநாகணவாய்ப்புள்ளும் நலமானகதுவாலிபலபக்ஷியுடனே. (ஏலெ)

வந்திருக்குமஜனங்களுடைய வளம்பதிதான் சொல்லவென்றால்மெத்தவுண்டே, கொந்துலவுபதியின்பெயர் அதிலேகொஞ்சங்கொஞ்சமசொல்லுகின்றேன், சிந்துதனில்முளங்குந்திடல்நல்லசிங்கப்பூர் மலாயிமோர்மான்கோலப்பின்னா, அந்தரமான்கடலிருக்குப் திடல்தான் அச்சிக்கறைசாவக்கறைமச்சில்பந்தர்.

முடுகு.

வந்திகரைசேருமிறுங்குபன்றுமும்
    வளமானநாகூர்நாகபட்டணமும்,
கொந்துபணிசெய்கின்றகும்பகோணம்நொசனூடு
    கூத்தனூர்திருவாரூர்கூப்பாச்சிக்கோட்டை,
கந்தமதூஊடிலவும்பாசிபட்டணமும்
    கனமானகாரைக்கால்புதுவைபொதக்குடியும்,
சிந்தைமகிழ்கின்றதஞ்சாவூர்திருவை
    திருச்சிறைப்பள்ளிமுதல்சேலம்ஈரோடு,
இந்தவழிபானதிருப்பூர்கோயமுத்தூர்
    எளிலானபாலக்காடுபுதூநகரமுடனே,
வந்திடும்வண்ணாக்காடுகோங்காடு
    வளமான அங்காடிப்புறமும்மலப்புறமும்,
விந்தைபெறும்பட்டாம்பிஓங்கலூர்ஈங்கூர்
    விதமானதிருவனங்காடிநகருள்ளோர். (எகில)

சீருனகாயல்பதி கீளக்கரை
    திருநெல்வேலி பாளையங்கோட்டை
பேரான மேலப்பாளையமும்நல்ல
    பிறபலமாந்தக்கறை ஆளூரும்
ஏரான கோட்டார்நல்ல
    இனியதொருகாலங்குடிபேர்பட்டி
தோருதுறைமுகமாமநல்ல
    தூத்துக்குடிமணக்கோடிதிருவாங்கோடு.

முடுகு.

காராளர்பெருகிவளர் திருவனந்தபுரம்
    காயங்குளம்கொல்லம் ஆலப்பிழைகொச்சி,
நாரல்மிகவான மணப்புறம்சாவக்காடு
    கலமானபொன்னானிபுதியங்காடி,
தாராளமானதோர்பாப்பனங்காடி
    தானூர்வேப்பூர்கோழிக்கோட்டுள்ளோர்,

தோராதவடகரை தல்ச்சேரிகண்ணூர்
    துங்கமிரும்மங்கலாபுறத்தாள்களுடனே,
பேருனமதரூஸ்ஆர்காடுவேலூர்
    பெலமானஹைறத்துரூபாதபல்லாரி,
தோரூதடல்லிகாபூல்கந்தவர்க்கா
துறையென கல்கத்தாவங்காளிப்பூரு,
வாரூனபொம்பாய் பூனசித்தாரூ
    வகையாக வெகுபேர்களேறினேமையா (ஏலெ)
எத்தனையோசனமிவர்கள் தாத்தினு
    ஏத்திக்கப்பலிரும்பெடுத்தான்,
பத்தியுடன்பொம்பாய் துறையைவிட்டு
    மெல்லமெல்லபாங்காக புறக்கடல்போய்ச்சேர்ந்தாரே,
வெத்திபெரும்நெருப்புப்புகைமூட்டிகப்பல்
    வேகமதாயகோடியதே,
எத்திசையும்புகழும் சித்தாநகர்க்கேக
    வென்றேசுக்கான் திருப்பினனே.

முடுகு.

இருகரையும்தெரியாது ஓடினதுகப்பல்
    ஏகனொருதுணையில்லாமல் வேறுதுணையில்லை
பருவரையும்சிறுமலையும் பாரதிடர்தாண்டி
    பாங்காகஎட்டுநாள்சென்றதனில்வைத்து
ஒருபொழுதுதங்கி மறுநாளிரும்பெடுத்து
    உரமானசுக்குசீரு உதய்தாக்கடந்து
சருஹமஹாவாதல் மெதுவாகக்கடந்து
    சாற்றினார்லம்லம்மதில் எகுறுனுங்கட்டி
துருசாகப்பதினைந்தாநாள் சித்தாவில்
    தோற்றியேகரையதனில் நேர்த்தியாய்வைத்தான் (ஏலெ)

விருத்தம்.

அருவுருவில்லாஜுதியருளால் பதினைந்தாநாள்
திருவுருமிறங்கினன்றாய் சேர்த்தினன்நகர்சித்தாவில்
சிருவுருவதனிலேலரி சென்றன்ம்தீர்வையோன்முன்
பொருளதுகொடுத்து அந்தப்புறக்கடல் வாயல்வந்தோம்,

பொதுவிருத்தம்.

வந்துபலசாமானமெடுத்துக்கொண்டு வகைவகையாய்நாங்கள வண்வருகும்போது, கொந்துலவு கோட்டையது காவல்காரன் குறிப்பாகத் தடுத்துச்செல கூலிவாங்கி, விந்தைபெறும் நகரிலங்கோரிடத்தில்வந்து வெகுவானசுமைகள்முதலிறக்கிவைத்து, சிந்தைமகிள்வாகஅவணிருந்தபின்னே சிறப்பாகநடந்ததை செப்புவேனே.

இராகம் தோடி. ஆனந்தபைரவி.

சித்தாநகர்தனிலிருந்து உத்தமர்களுடன்கூடி
சிறப்பாகவோரிடத்தில் சென்றங்கிேனோம்
மத்தநாள்சுபஹுதனில் கத்தனைப்பணிந்திறைஞ்சி
மாதாஹவ்வாராம் பிராட்டியார் கபரிடம் சென்றோம்
எத்திசையும்புகழ்கின்ற பத்தினி ஹவ்வா தமையே
ஏத்திதுவாஇரந்தோம் பாத்திஹாஓதி
பத்தியுடனேநடந்து உத்தநகர்தனிமேலவந்து
பாங்காகஒட்டகக்காரன் தனையழைத்து
வெற்றியுடன்மக்கநகர்க் கித்தினம்செல்வோமென்று
விரும்புசிலவுக்காக பணம்கொடுத்தோம்
உத்தமர்போலேபத்துக்கள் அத்திரி கொண்டங்குவந்தார்
உடனேஒட்டகங்கட்டி வழிநடந்தோம்
அத்தமானராத்திரியில் முற்றும்நடந்தேவிடிந்து
ஆனலுஹாநேரத்தில் கத்தாவினிற் சென்றோம்
சற்றுநேரத்திற்குள்ளாக சமையல்பொங்கிப்புசித்து
தாக்கினர் ஒட்டகங்களை வீக்கிநடந்தாரே,
அன்றுபொழுதுமிரவும் சென்றுநடந்துவிடிய
ஆனதொருமக்கநகர் தானதில்சென்றோம்
சென்றுமக்கமாநகரில் அன்றொரு செய்கையுங்கூட்டி
சிறந்தபாபுஸலாமெள வாதல்கடந்தோம்
கன்றுக கஃபத்துல்லா கண்டு தெரிந்தேனோம்
நலமாய்கஹபம் தவாபு செய்திரஞ்சினோம்
ஒன்றாய்த்தொழுதிறைஞ்சி சென்றுசபா மருபா
ஓடி இஹ்ராமுறித் தங்கோரிடத்திருந்தோம்.

விருத்தம்.

சிறப்பாயிருக்குங் கஃபத்துல்லாவின் திருமுன்சென்று
விருப்பாகநின்றுதுவா விரந்தேனெந்தன் மேலவனே
பொறுப்பாயப்பவங்களதுக்கானவீடு புனிதமுடன்
திருக்காரணத்தை வலஞ்செய்துயானுந் தெரிசித்தேனே.

பாவம்துலைக்கவரும்வீடு பத்தலர்கள் முத்திபெற்றும்மனத்
தாபம்தலைக்கவரும்வீடு தானவனுனவன்றன்
ஏவல்பெருகவரும் வீடு என்றிசையோர்பணியும்
ஆவல்மிகுத்ததிரு வீடு கண்டுளமாசித்தனே.

தரு. பதம்.

கண்டேன் கண்டேன் கருபத்துல்லாவை
கண்டு தெளிந்தேனே மனதாசைகொண்டு தெளிந்தேனே.
அண்டர்திரு கரத்தா இயற்றிய கருபாவை
ஆதியருளால்வெகு ஜோதிப்பிரகாசமாய் (கண்டேன்) (கண்டே)
எத்திசையும்புகழ் மக்காமாநகர்நடுவிலே
இருக்கும்கருப்பத்துல்லா பெருக்கும்பெருஞ்சிறப்பும்
வெற்றியுடையபெருமிகுப்பாவந்துலைப்பதும்
மேலோனறிவதல்லால் ஞாலத்தெவரறிவார் (கண்டேன்)
சுற்றுந்திருமதிளுமுற்றும்கரும்பட்டாலே
சூளமறைத்திருக்கும் ஹஜருல்அசுவதைத்தொட்டு
முத்தியழுவார்கோடி நத்தியழுவார்கோடி
முறையிட்டழுவார்கோடி உறையிட்டழுவார்கோடி (கண்டேன்)
வாயில்நிலைகள்றெண்டும் தூயபிரசிதமோ
மணியாலழுத்திவைத்த பணியோபசும்பொன்பூச்சோ
நேயப்படிகள்ரெண்டும் ரத்தினமோபச்சை
நிற்கும்கதவிரண்டும் சொர்க்கவெள்ளியோசொல்ல (கண்டேன்)
கதவிலக்கம்மலம் பூத்தவிதுவென்னவதிசயம்
காறணப்பசும்பொன்னின் படத்தால்மறைத்திருக்கும்
இதமொத்தபலவெள்ளை மரகதக்கல்களால்
இட்டழுத்தியதங்கப் பாத்திவைத்திருப்பதும் (கண்டேன்)
பாபுஸ்ஸலாம்கடந்து கருபம்தவாபுசெய்யும்
வளிமுத்தமுமருகே வெளிமுத்தம்தனிலே

ஆப்ஸப் ஸ்மீணரும் இபுருஹீம்நபிமக்காம்
அறியதோர் இஸ்மாயீல் நபிமக்காமுமங்கே (கண்டேன்)
சுற்றுந்திருமதிலும் மனராமஜீதுகளும்
துலங்குங்காங்கலெல்லா மிலங்கும்பலபணியாய்
முற்றும்மரகதக்கால் பத்திபத்தியாய்நிற்கும்
முழுமணிகிந்தீல்கள் அணியணியாய்த்துலங்க (கண்டேன்)
அஷ்டதிசைபுகழும் பைத்துல்லாஉள்புகுந்து
ஆதிதனைவணங்க ஆசைபெருகிச்சென்று
பட்டபாடுகள்சொல்ல பகலும்இரவாகிடும்
பாங்காயிறையல்லாமற் றெவர்தாமறிவார் (கண்டேன்)

கொச்சகலிப்பா.

கத்தனருளேபுரிந்து காசினியெல்லாம்பெருகி
வெற்றிதவமிருந்து மிக்கபாவந்துலைக்க
முத்திபெறவந்துதித்த முதலோன்திருவீடு
நற்றவங்கள்பெற்றமக்க நாட்டுவளங்கூறுவேனே.

கலிப்பா.

அண்டர்புகழ்ந்தேற்றி ஆசித்திடும்வீடு
எண்திசையோர்போற்றி இறைஞ்சுமிந்தவீடிதுதான்
கொண்டல்குடையுடைய கோமான்நபிபிறந்து
மண்டலத்தோர்கொண்டாடும் மக்கநாட்டுவளங்கூறுவேனே.

## மக்கநாட்டு வளங்கூறல்.

தரு.

அந்தமில்லாமுடிவுமில்லாதான் ஆதியாகியனுதியுமாகி
மூந்தவுந்தன்திருவொளியாகி மூச்சுடருமொன்றாகயிருந்து
விந்தைவிந்தையதாகவகுத்து விளைந்தகாரணமாகப்பிணைந்து
வந்தநாயகரெங்கள்முகம்மது வாழுமாமக்கநாடிந்தநாடே.

அன்னமாகிமயில்வடிவாகி யானதோர் கிந்தீலாகி எக்கினில்
வன்னமாமணியாகியிருந்து வகைவகையாகதோத்திரஞ்செய்து
முன்னமாதித்திருவிளத்தாலே முளங்கிஆதம் நுதலிடத்ததாகி
நன்னயமப்துல்லாபுத்திரர் நாளும்வாழ்மக்கநாடிந்தநாடே.

ஹக்கன்பார்வைமிகுந்திடும்நாடு கஃபத்துல்லாசிறந்திடும்நாடு
திக்குள்ளோர்கள்புகழ்ந்திடும்நாடு செய்தபாவந்துலைந்திடும்நாடு
மிக்கதூதர்பிறந்திடும்நாடு விரும்பியேஹஜ்ஜிசெய்திடும்நாடு
மக்கமாளும்முஹம்மதுநன்னபி வாழும்மக்கநாடிந்தநாடே.

காறணங்கள்மிகுந்திடும்நாடு கஃபத்துல்லாசிறந்திடும்நாடு
பூரணப்ரகாசங்கள்போலவே புகழறங்கள்விளங்கிடும்நாடு
ஆறணங்கள்முளங்கியபள்ளி அதிகமாகசிறந்திடும்நாடு
வாறணத்துறைஎங்கள்முகம்மதர் வாழுமாமக்கநாடிந்தநாடே.

மாடமாளிகைகூடங்கள்கோபுர மண்டபங்கள்வளர்ந்திடும்நாடு
மேடைமீதினிலன்னங்கள்போலவே மின்னனார்கள்விரும்பியவைத்
சேடுசோடாகஒதுங்குறவைதுலங்கியெங்குமுளங்கிடும்நாடு [துமை
வாடைவீசியஎங்கள்முகம்மதனார்வாழும் மக்கநாடிந்தநாடே.

ஒதியோதிகுர்ஆன்முளங்கும் ஓசையாசைமிகுந்திடும்நாடு
மாசிலாதஞ்சுபாங்குமுளங்கும் வணக்கஞ்செய்து இணக்கியநாடு
வீதிவீதிகடைத்தெருலங்கரு மிகுந்துஅன்னங்கொடுக்கின்றநாடு
நாதரெங்கள்முஹம்மதுநன்னபி நாளும்வாழ்மக்கநாடிந்தநாடே.

காடுதோறுங்கனகப்பெரும்பயிர் காய்த்துச்சாய்த்துக்கதிர்விடும்நா
வீடுதோறும்விருந்துகள்செய்து விளங்குந்தர்மமிகுந்திடும்நாடு [டு
கோடுதோறுங்குயிலன்னங்கோகிலங்கூடிதிக்குருசெய்திடும்நாடு
நாடுதோறும்நபிசலவாத்தையே நாளும்வாழ்மக்கநாடிந்தநாடே

கலிப்பா.

கனமானநாடு அதிமேலபெருவீடு கத்தன்றனைப்பணியவும்
மனமாகும்நேசர்உறவோரென்றாலும் வருவார்கள்கோடிகோடி
இனமானபேர்களெவருந்துடர்ந்து இயல்பானஹஜ்ஜீசெய்தே
தினமாகநாடும்படியேஅறபாத்தில்செலவேபிரயாணமானோம்

தரு.

தினதெந்தின தினதெந்தின தினதெந்தின தினன.
மக்கந்தனிலிருந்து ஹஜ்ஜீ மாதம்பிறந்தேழில்
வளமாகிய அறபாத்துநன்மலைநாடிநடந்தோம்

தக்கவர்கள்மிக்கவர்கள் சகலர் ஆண்பெண்களுடன்
தயவாகியஅறபாத்து நன்மலே நாடிநடந்தோம்
வாகனத்திலேமிகுந்த ஒட்டகங்சோவேறுகழுதை
வலுவானகொக்கொடு மேவசரியேறிடுவார்
சாகரம்போலேபெருகி வாகனமில்லாதவர்கள்
தடமிடங்கொள்ளாமல் வெகுஜனங்கள் வருவார்கள்
இப்படியேவந்து எகனறபாத்தினிலே
இடமுடையடேரா கூடாரமடித்திடுவார்
சொற்புகழ்சேர்தந்தையர்தாய் ஆதமும்ஹவ்வாவும் நல்ல
சுகங்களனுபோகஞ்செய்த தலங்களிதுவாமே
நற்புடைய நபிகள்முதலனபியாக்கள் ஒலிமார்கள்
நாதாக்கள்தவஞ்செய்து ஹஜ்ஜீமுடித்ததலமிதுவே
முறைப்படியேநடந்து வருமுறைகள்தவராமல்
முயன்றுஹஜ்ஜீசெய்யுமாதமொன்பதா நாள்வெள்ளி
தப்பிதமில்லாதஷரீபுகாலி கத்தீபுடனே
சுபவாகவெகுபேர்கள் தானுமலேயேறி
துப்பாவாயிறையவனைத்தொழுதுகுத்துபாஓத
துவக்கினர்களலுஹர் அஸர்நோமதினடுவே
ஒப்புவமையில்லாதஉடையோனருளால்குத்துபா
ஓதிமுடித்தார்கள் அசர்நோமதின்பின்னல்
வெல்லும்மறையோர்களெல்லாம் மேலவனைத்தான்றொழுது
வீகினர்கள்வெள்ளைஎங்கு முள்ளவர்களறிய
நல்லதெனப்பார்த்திருந்த நாங்களனைவோரும்
நாதனையீதல்அலுஹாதொழுது துஆக்கேட்டோம்
இப்படியேஇருக்கின்ற வேளையதுதனிலே
இடிகள்முளங்கிடுவதுபோல் வெடிகள் பீரங்கியினல்
மைப்புடையமகரிபிலே கூடாரம்பிடிங்கியவர்
வாகனத்திலேற்றி வழிநடந்தார்கள்துடர்ந்தே
நற்புடனேமுஸ்தலிபா தனிலிறங்கியவரவர்கள்
நவமிழர்தஷைத்தானுக்கெறியகல்களெடுத்தோம்
மெய்ப்புடையநோமது விடிந்துலுஹர்நோமதில்
மீனுவில்வந்திறங்கிக்கூடாரமடித்தோம்.

## விருத்தம்.

மீனாவில்வந்துசேர்ந்து மிக்கதோர்ஷைத்தான்களுக் குத்
தானகக்கல்லெறிந்துதயவுடன் கூடாரத்தில்
மானார்கள் மாக்களொடுவந்துசேர்ந்தமூதுபொங்கி
கானக்கள்பொசித்தபின்னே நடந்ததைக்கவலுமேவனே

## தரு.

சீர்மேவுமீனாவிலே நல்ல
சித்திரமாகியபள்ளிகளும்
பார்மேவுமாநகரில் நல்ல
பாங்கானவீதிகடைத்தெருவும்
கார்மேவுமாமலைசூழ் நல்ல
காரணமானதோர் மீனாவிலே
தார்வேந்தர் மன்னர்மன்னர் நல்ல
தக்கவர்மிக்கவ ரொக்கவரும்
வந்தவந்தபேர்களெல்லாம் முஸ்தலி
பாவிலேயெடுத்த் கல்களெல்லாம்
முந்தஷைத்தான்களுக்கு நல்ல
முறைமுறையாக எறிந்தபின்னும்
தந்தானிடத்தில்வந்து நாங்கள்
தயவுடனே அங்கு தானிருந்தோம்
அந்தச்சமயத்தில் நல்ல
ஆடுமாடொட்டகந்தானறுத்து
விந்தைவிந்தையாய்கொருபான் மெத்த
ஜனங்கள் கொடுத்திடுவார்
தேடியிறைச்சிகளை நல்ல
சிந்தைமகிழ்ந்துகொண்டுசெல்வார்
ஆடிப்பறக்குகின்ற காகம்
கழுகங்கொன்றுங்காணோம்
வாடிகுழிகள்வெட்டி நல்ல
வாரிவாரியங்கே தான்போட்டு
மூடித்திரிவார்சிலர் பின்னும்
முற்றும்வழிகளெல்லாம் கிடக்கும்
இப்படியெல்லாவிடத்தும் நல்ல
ஏகபோகமதாய்த் தான்கிடக்கும்

அப்படியேவந்தோர்வந்தோர் அருந்து
குருபான்கொடுத்திடுவர்
நற்பாய்பொழுதடைந்து பின்னை
நல்லதோரிஷர்முடித்துப் பின்
செப்பத்துலையாத சில
சித்திரவேலைகள் செய்திடுவார்
வாணம் வெடிக்கட்டுகள் நல்ல
மத்தாப்பு பூக்குத்தி பலகப்பஞ்சுகள்
நாணப்பணிகளுடன்* வெகு
நட்சத்திரச்சில்லோடி வாணங்களும்
கோணத்திரிசக்கரம் ஏறு
சக்காம் கூட்டத்திரிசக்காம்
தோணுத்துலைதூரம் சென்று
தூங்கிவிழுகின்ற பூங்குலிகம்
பத்தியேறும்புகைக்கூடு நல்ல
பாதாளமோடா சனஞ்சுருட்டி
எத்தனைவிதவிதமாக இவர்
எங்கிருந்திவ்வேலைசெய்தார்
இன்னவிதம் நடக்க நல்ல
இடையிடையினில் பீரங்கிடம்டமென
சின்னமலைமேலே வெடிகட்டுத்
துப்பாக்கி படபடென
மன்னவர்கள் மூன்றுபங்காய் நல்ல
வாதுகளாகத் துடங்கினர்காண்
பொன்னின் மக்கமாநகர் புகழும்
ஷாமும்மிசுறுடனே
எஷாவிலேதுடங்கி நல்ல
ஏகன்சுபஹு மட்டாகுமே
கூசாமலொவ்வோர் விதம்
கொளுத்திவிட்டார்களதிசயமாய்
நேசமுடனிரண்டு நாளும்
ஷெய்த்தானுக்கல்லெறிந்து
வாசமுடன்நாங்கள் வாரபோது
ஜபல்நூர்கண்டோம்

நடந்தோமவ்விடம்விட்டு மோயா
நக்கக்கிடைக்காத திக்கெங்கும்
திடமானஜபலக்குபைஷாடன் ஜென்னத்தும்
மஹல்லாவுந் தான்கடந்தோம்
இடமானமக்கநகர் வந்து
ஏகன்கஃபா தவாபுசெய்தோம்
அடவாகநாமிருந்த வீட்டில்
அந்தியில்வந்தங்கிருந்தோமே
அன்றுபோய்மறுநாளில் உம்ரு
செய்யவென்றேஅங்கு தானடந்தோம்
சென்றேஉம்ருத்தொழுது இஹ்ராம்
கட்டி மக்கம்திரும்பிவந்தோம்
நன்றாய்உம்ரு கொண்டுவந்து பின்
நாயன்கபுா தவாபுசெய்தோம்
சென்றேமறுபாஒடி தெண்டம்
செய்தேஇஹ்ரு முறித்தோம்
இந்தவிதமாக மக்கத்திருந்து பின்
நடந்ததை யெடுத்துரைப்பேன்.

விருத்தம்.

ஹஜ்ஜீமுடிந்தபின் உம்ருவும் செய்திஹ்ராமுறித்து
பக்ஷமுடன் கஹபாவை வலஞ்செய்து பத்தியுடன்
அச்சமிலானைத் தொழுதேற்றியே கொருபான்கொடுத்து
நற்செயலாகிய மக்கநகர்தனில் நாமிருந்தோம்.

இருந்துபின்னொருமூன்று நாலுநாளாச்சென்ற பின்னேகமதாய்
பொருந்தமதினநகர்க் கேகவென்று பிற்பலமாய்
திருந்தயிருந்தவர் யாவருங்கூடி சிறப்புடனே
செறிந்துநடந்தவிதம் சொல்குவேனிச் செகதலத்தே.

தரு. தோடி.

மக்காநகரிருந்தபேர் சிலர் மன்னர்மன்னவர்கூடியே
மதினமாநகர்க்கேகவென்று நலவழிநடந்துதுடர்ந்திட்டார்
தக்கமிக்கவரொக்கசூழவே தாங்குமொட்டகமீதிலே
தாக்கியொட்டகம் வீக்கியேவழி தானடந்து துடர்ந்திட்டார்

காமரும்போகவேணுமென்றுளம்
நாடியேதுணைகூடியே
நல்லதுஎவ்வழிசெல்குவோமென்று
நாங்கள்கூடிஆலோசித்தோம்
சித்தைவழிசெல்வதுத்தமமென்று
செப்பினர்மனமொப்பியே
சிறந்தஒட்டகம்கொண்டுவரச்சொல்லி
சேர்த்தினோம்மனம்பூர்த்தியாய்
அந்தக்ஷணத்தில் ஒட்டகங்கொண்டு
அறபிமார்சிலர் தோன்றினர்
ஹக்கன்கருபாதவாபு செய்தபின்
ஆதியைத்தொழுதேற்றினோம்
வரிசைபெருகிய பைத்துல்லாதனை
வாழ்த்தியே புகழ்ந்தேற்றியே
வல்லவனருளால் நீடுளி
வாழ்கவாழ்கவே வாழ்த்தினோம்
கண்ணின்மாமணி யாம்முஹம்மதர்
காறணப்பதம்போற்றியே
காக்ஷிபெறவும் மீக்ஷிதருகவும்
கருணைபுரிந்தெனை யாள்கவும்
வாச்சுதிதுநல்லசமயமாமென்று
வாகனத்திலேறியே
வழிநடந்துநாம் துணைவர்சூழவே
வருங்கத்தாவி லிறங்கினோம்
அருமைமிகுந்தருள் கிருபைதந்திடும்
ஆண்டநாயகன் வேண்டுவார்
அன்றுபோய்மறுநாளிலேஜித்தா
ஆனதோர்நகர் சேர்ந்திட்டோம்
ஜித்தாநகர்தனிலிருந்து எம்பகு
செல்கவே சம்போக்கேறவே
சீக்கிரம்தலாலழைத்து தோணியை
சேர்த்துவீர் நம்மை யேத்துவீர்.

விருத்தம்.

இப்படிஜித்தாதனிலிறங்கி நாலைந்துநாளில்
துப்பரவாய்சம்போக்கு துலங்கும் எம்பகுக்குச்செல்ல
நற்புடன்தோணியேறி நடந்திட மனதுநாடி
செப்பமாய்பத்தேமாரி சென்றவா றெடுத்துரைப்பாம்.

தரு. கும்மிச்சிந்து.

ஜித்தாநகர்தனிலேயிருந்து நல்ல
எம்பகுசெல்ல மனம்நாடி
பத்தேமாரிதனிலேசென்றபின் நல்ல
பாங்காய்பாயெடுத்தோடினனே
ஓடிநடந்துபெருங் கடலிலக்கரை
ஓரமதாகவேதானோடி
கூடியிருந்தவர்நாங்களெல்லாம் மனம்
குன்றாமல்நன்றாகவேயிருந்தோம்
இருந்துஓரிரண்டுநாளோடி நல்ல
ஏகனருளாலே போகையிலே
வருந்தியிருந்து மனஞ்சலித்தான் மனம்
வாடைக்காத்துக ளில்லாமல்
காத்துகள்தக்கம்கிடையாமல் அக்கரை
கண்டகண்டவிடந் தானிறுத்தி
நேத்தியாய்காத்து வரும்போது அவன்
நின்றவிட்டங் கோடினனே
ஓடியேநாலுநாளாக எம்பகுதன்
ஓடியேவைப்பவன் ஓடாமல்
தேடியேறாயிஸ்தான் கடந்து எம்பகு
சேருதர்க்கே யிடமில்லாமல்
எட்டுநாளாகவே யோடியோடி யவன்
எம்பகுசெல்ல விடமில்லாமல்
மூட்டியே ஒன்பதாம்நாளில் றாபிக்கிலே
முடுகியேகரை வைத்தனனே
றாபிக்கிலேகரை தானிறங்கி நல்ல
நன்றாகஒட்டகந் தான்பிடித்து
ஏறிநடந்து தலைகடந்து நாங்கள்
ஏகையிலேவழி போகையிலே

மிக்ன் குளிர்கள் பொறுக்காமல் நாங்கள்
ஏங்கெங்கும்கூடி பொதிந்திருந்தோம்
ஆகங்களெல்லாங் கிடுகிடென்ன பல்கள்
ஆடக்கால்கள் தடுமாற
வாரியின்காத்தும் மலைக்காத்தும் வந்து
மாந்தர்களுள்ளம் நடுநடுங்க
குபாரிலப்பெரிய பதுருமலையடிபோயங்
கிரங்கியிருந்தோமே.

விருத்தம்.

புதியவனருளினுலே புகழ் இறசூலுல்லாவும்
அதிகமாயமர்விளைத்த ஹம்சாவும் அசுஹாபிமாரும்
கதியிழந்த அபூஜகில்தன் சேனைப்படை மடியமோதி
பதிபொன்னூரில்ச் சென்ரோர்க்கு பாத்திஹா ஓதிநின்ரோம்.

பாகதியடைந்தபேர்க்கு பாத்திஹா ஓதிநின்று
இறைதனைப்போற்றிநின்று யேற்றியே மடத்தில்வந்து
விறைவுடன் அமுதுபொங்கி வேகமாய் பொசித்துநன்ருய்
திறமுடன்மதின்மேக சேர்ந்துநாம் நடந்திட்டோமே.

தரு.

வழிநடந்துசென்ரோம் பதுரைவிட்டு
வழிநடந்துசென்ரோம் (வழி)
வழிநடந்தேகியே பதுருங்கடந்தப்பாலே
மொழியத்தகாதமலை முற்றுஞ்சுற்றுங்கல்களில் (வழி)
அடுக்கடுக்காய்மலைகள் தொடுத்துத்தொடுத்திருக்கும்
அந்தவிடங்கடந்து முந்தித்துணை துடர்ந்து
இடுக்கமாய்பத்துக்கள் என்னசெய்வாரோவென்று
ஏங்கிமனங்கலங்கி தூங்காமலேமுளித்து (வழி
அறியாத்துணைவர்களும் தெரியப்போகாத்திருட்டும்
அங்கங்கேஒட்டகங்கள் தங்கிக்கிடப்பதுவும்
ஒருவருக்கொருவரொத்தாசைசெய்ய ஒட்டகங்கள்
ஒப்பமுடன்வரவே சப்ராவாதியிலானோம் (வழி)
சப்ராவாதிதனிலே துப்ரவாயிறங்கி தங்கியிருந்தோம்
அங்கே நாலு நாளும் மட்டாக

மெய்ப்புடன்மதீனம்போய் மீண்டுஒட்டகம்வந்து
விரைறவாயொட்டகங்கட்டி துருசாகவே (வழி)
சப்ரவாதியிலிருந்து ஒட்டகந்தனைக்கட்டி
தாங்கிவழிநடந்து ஒங்குந்துலைகடந்து
இப்புவியினில்கல்கள் பத்திபெறவில்லை
ஏரானகல்கள்தாண்டி வீரா அப்பாசில்சென்றோம் (வழி)
அந்தரமாயுயர்ந்திருக்கும் பெரும்மலைகள்
அதிலேமுள்வேலாமரம் அங்கங்கேதானிருக்கும்
நொந்துவந்தவர்களுக்கிருக்க நிழல்கிடையாது
நொம்பலப்பட்டவர்கால் வெந்திடைந்தழுவார்கள் (வழி)
இப்படிபலபலவிதமாய் துயரப்பட்டு
இருந்திடைவார்கள் நடந்தழுவார்கள் சிலர்
அற்புதமாக அனேகவருத்தங்களால்
ஆனேம்வீரு அலியில் தானேனருளினாலே (வழி)
வீரு அலியிலிருந்து ஒட்டகந்தனைக்கட்டி
வேகமுடன்நடந்து தாகங்கள்துடர்ந்து
பேருனவாழ்வுதரும் பெரியோனருளினாலே
சீருனமாமதினா சென்றங்கிறங்கினனே. (வழி)

விருத்தம்.

மதினமாநகரின்கோட்டை வாயலிலிறங்கியங்கே
பொதியிருள்காலமாக புகந்திடாதவணிருந்தோம்
பதிதனில்விடிந்தபின்னே பாங்குடன்நகருள்சென்று
துதிபெறஒர்வீடுவாங்கி துணைவர்களோடிருந்தோம்.

இருந்தபின்னகமகிழ்ந்து யேகியேறவுலாதன்னை
சிறந்தசியாறத்துச்செய்ய சென்றொரு ஷெய்கைக்கூட்டி
வாம்பெரும்பைத்துல்லாவின் வாயலுள்புகுந்துநன்றாய்
அறந்தருநபியுல்லாவுக்கு அதபுடன்சலாமும்சொன்னேம்.

தரு.

காணப்பெற்றேன் எந்தன்கண்ணில் காணப்பெற்றேன்
எனதுள்ளங் கண்டு தெளிந்தேனே
றவுலாவைக் கொண்டு தெளிந்தேனே (காணப்)
காணப்பெற்றேன் நபியிறசூல் திருக்
காறணமாம்பரிபூரணவாழ்வதை

தோணப்பெற்றேன் துலங்கியிலங்கிய
சுந்தர றவுலாவை எந்தனிருகண்ணில் (காணப்)
அண்ட தினமிறங்கி கொண்டாசைபுரிவதும்
அடிபணிந்திடுவதும் படிசிறந்திடுவதும்
மண்டலத்துறவோர்கள் எண்டிசையின்மானிடர்வந்து
வாகாய்த்திருமுன்னின்றுவகன்சலாம் சொல்வதும் (காண)
முத்தரைபெறும்நபி நித்திரைசெய்யுமிந்த
மோனவீடதுசொர்க்கமான வீடிதுதன்னை
சுத்தியவரவர்கள் முத்திசியாரத்துசெய்து
தூங்கிநின்றழுவதும் ஏங்கிநின்றழுவதும் (காண)
ஆதாரம்உமையல்லாமல் வேறில்லையேயெனக்கு
அடிமைபிழைபொறுத்து முடுமைதனைத்தவிர்த்து
பாதாரங்கெதிதந்து நாதாஎனைரக்ஷித்துப்
பரகதிதருமெங்கள் நபியுல்லாதிருப்பாதங் (காண)
அந்தியும்பகலும் அறவிந்தமலரைத்தேடி
ஆசைபெருகிவாடி நேசமதுறவாடி
சிந்துகரையும்காடும் வனமும்மலைகடந்து
தேட்டமுடனேஎந்தன் நாட்டப்படிகண்ணில் (காண)
அழகுமிகுந்திலங்கும்றவுலாதிருமுன்னின்று
அடுத்துஇறைசலாத்தை எடுத்துவெகுவாய்ச்சொல்லி
பழமமென்று அழுது கண்ணீர்கள்சொரியஎந்தன்
மனதில்துயரகற்றி கனதாய்க்கிருபைசெய்வாய் (காண)

விருத்தம்.

அழுதழுது என்துயரமெல்லாஞ்சொல்லி
ஆதியிறசூல்நபியை யடிபணிந்து
முழுதுமெந்தன்பிழைபொறுத்து கிருபைசெய்து
மூத்திதந்து தங்களும்மத்திலாக்கி
பழுதுசெய்தபாவியென் றென்னைத்தள்ளாமல்
பரகதிதந்துதங்கள் ஷபாஅத்தில் நல்கும்
எழுதமுடியாதஇறையோன்தன்தூதே
என்றேற்றினேன்இருசரணம்போற்றினேனே

இப்படிக்கெஞ்சிக்கெஞ்சி இடைவிடாதழுதுவ்டி
நற்புடன் நபியுல்லாவை நாள்தோறும் போற்றியேற்றி
பற்பலவிதங்களாக பையவியான்றுதிப்பேனிந்த
அற்புதபைத்துல்லாவின் அழகினிற்சிறிதுசொல்வேன்

தரு.

என்னவென்றுசொல்வேன் எங்கள்இறசூல்மதினாவில்
இயற்கையாகியசொர்க்கமாநகர் இதுவாமெனப்புகழ்வாம்
மன்னன்திருவருளால்வந்த மகுமுதுநன்னபிதான்
வாழும்றவுலாவானதீன் வளமைசொல்லக்கோளும்
முன்னமாகிய சொர்க்கமாநகர் மக்கமாநகர்திக்குள்ளோர்
முறையாகவேறவுலாவதை தெரிசித்திடவருவார்
கன்னல்மொழிநபிநாயகரிருக்கும்றவுலாவை
கண்டுதெரிசனஞ்செய்திட வென்றியுடன்வருவார்
வரிசைபெறும்றவுலாமுன்பில் வருவோர்களெல்லோரும்
வள்ளல்நபிதமக்கேசலாம் சொல்விமுறையிடுவார்
பிரிசத்துடன்நபிநாயகர் உம்மத்துகளெல்லாம்
பிழையேபொருத்தருள்வாயென பெரியோனிடங்கேள்ப்பார்
சீர்மேவியறவுலாவதின் சிறப்பானதுசொல்ல
தெரிந்துந்தெரியாமலே சொல்லும்பிழையைபொருத்தருள்வாய்
பார்மேவியமதினாநகர் நடுவாம்பள்ளிவாயல்
பாங்காகவேநபிநாயகம் தூங்கும்றவுலாவே
ஏர்மேவியபிரசுற்றுகள் எங்கும்நிறையணியாய்
இயல்பாகியகுறுஆன்எழுத்து எங்கும்துலங்கிடுமாம்
பள்ளியறைறவுலா பளபளவென்றிலங்கிடுமாம்
பத்திபெறசுற்றும்நிறை பணிகள்பசும்பொன்னால்
தெள்ளுமொளிநபிநாயகர் இருக்கும் முக்காமருகே
சிறப்பாகியஅபூபக்கர் சித்தீக்உமர் ஹத்தாப்
வள்ளல்நபியுல்லா வலபாகமிருபேரும்
மகிழ்வாகியபுகழ்மாதுலர் மறைவாயிருப்பார்கள்
உள்ளம்மகிழ்ந்திடும் நாயகர் மகள் பீவிபாத்திம்மா
உகழந்தேமகிழ்ந்தை ஷத்தும்மா ஒருசுத்திலங்கிருப்பார்
இறைதூதுவர்நபிநாயகர் இயற்றும்பள்ளிவாயல்
இயல்பாகியறவுலாவதை துயர்ந்தேகட்டியிருக்கும்

திரையுஞ்செவிறணிதூண்கள் தயங்கும்மரக்தமாம்
சட்டவிட்டங்கள்பட்டியாருடன் தாங்கும்பரப்பெல்லாம்
சரவோடுகள்புறைஓடுகள் நிறைஓடுகளெல்லாம்
தளுவரமடைவளையும் பலதாம்பூரங்களாலே
விறைவீசிய றவுலாவதின் விளங்குங் கரமெல்லாம்
மேன்மைப்பணி யணித்தூண்களும் விதவிதமாமரகதமாம்
வாயல்நிலையிரண்டும் பசும்பொன்னாலமைத்திருக்கும்
வளர்பேர் திகையறு காருடம மணிமுத்துகளாமே
நேயப்படியிரண்டும் பச்சைரத்தினம் புஸ்பாரகம்
நிலவோடுறுகதவானது நீளகோவிற்சிதமாம்
வாலமதிபோலேபல விதானங்கள்மேக்கட்டி
வகையாய் வெகுமணி கிந்தீல்கள் அணியாயிடை-தூங்கும்
சீலமுடன் வால்சேடுகள் செறிந்தே சோடுசோடாய்
சிறப்பானகுளாப்பும் அதினிடையேயணியணியாய்
கோலம்பலவிதமாமணி கிந்தீல்களும்தூங்கும்
கொத்துச்சரம் முத்துச்சரம் பத்தித்துடர்ந்திலங்கும்
ஆலநபியறசாளுகின்ற றவுலா திருமுன்பில்
அநேகமதிசயமுண்டதை யார் சொல்லவும்முடியாது
வெள்ளிநாளையில் குத்துபா ஓதும் மின்பர்தனையே
விளங்கும்பசும்பொன்னால் பலவிதமாயமைத்திருக்கும்
பள்ளியில்நிமாசுசெய்ய படங்கள்விரித்திருக்கும்
பத்திபத்தியாயெத்தனைவிதம் படங்களென்றுசொல்வேன்
உள்ளங்கிளந்தனைவோர்களும் ஓதும் குறுஆனும்
உயர்வானசலாம்சொல்லுவதும் ஓசைபெருங்கடலே
வள்ளல்நபியரசாள்கின்ற மதிநாகரமுகை
வல்லோனருளாலின்னம் சொல்வேன்வேரிசையாய்

பின்முடுகு. ஏசல் தரு.

ஆதிவொளிவாமிறசூல்அரசிருக்ரும்மதினநகர்தனிலே-சொர்க்கத்
தண்டருனுதினம் கொண்டமயலாலே
முண்டகமாம்பதம் கண்டுதெரிசனஞ்செய்வார்
ஜோதிவொளிவாலமைந்த தாதரிறசூல்றவுலாதனையே-நிதமுஞ்
சுத்தியணியாகி எத்திசையும்போற்றும்
வெத்திநபிபதம் முத்தியேகாவல் செய்திடுவார்

வாசமிகுமாநகரில் வாங்கு மனாராவும் மஜீதுகளும்—வளரும்
மணிமாடகூட கோபுரமு மண்டபமும்
முண்டில்களும் என்றுஞ்சிறந்திடுமே
தேசம்புகழ்ந்திடும்நகரில் சிறந்தசப்ரமஞ்சமும்—மேடைகளும்
சிங்காரமானகடைத்தெருவும் மருகும்
செப்பிடவொண்ணாதபணி உற்பனமதாக ஒளிதுலங்கும்
தலம்புறக்கும்ராசர் சித்திரச்சாலை அக்கசாலை—சபைமண்டபமும்
தங்கும்படையாள்கள் எங்குமேநெருங்கி
தன்னியல்துறுக்கி மன்னருஞ்சாமி யுண்டதிலே
பலம்பெருக்கும்மதினநகர் பாவலர்கள்நாவலர்பூ மறையோர்
பத்தமுடையோர்கள் நற்றவமிகுந்து
முத்திபெறநாடியே கத்தன்தனைப்பணிந்திடுவார்
பார்புகழும்மதினநகர் பதியில்மிகுகடையும் கடைத்தெருவும்
பந்திபெறவந்தோர்க் கெந்தவிதமோசறக்கு
அந்தவிதமெல்லாம் சிந்தைமகிழ்ந்திடக்கொடுப்பார்
சீர்மிகுந்தபசிக்கமுதுசெய்யும்ரொட்டி அடிசிகள் காய்கறியும்
செய்யபலகனிகள் வையமதிலுண்டோ
செப்பமுடியாதவிதம் எப்படியோயானுரைத்திடுவேன்
கட்டுவர்க்கப்பட்டுகளும் கனத்தமிசுரூர்படம்கேம்பிரியும்
கனகவிதமான அநேகசரக்கெல்லாம்கட்டியே
மூட்டைகளிட்டு சடைநிறைத்திருப்பார்
அட்டதிசைகளிலிருந்து அதிசயமாம்பலசறக்குகள்கொணர்ந்து
ஆசைமிகுவோர்க்கு நேசமிகப்பெறவே
அங்களிடித்திறிவார் செங்கையினல் விலைவாங்கி
இந்தவிதம் நகர்தனில் வந்திருக்கும்சறக்குகள் எவ்வகையும்
எடுத்துரையுமென்றால் தொடுத்துமுடியாதே
என்னவிதமென்றுமன்னர் முன்சொல்குவேனையா
அந்தநகர்தனிலிருந்து சிந்தைமகிள்ந்ததிசயங்கள்பார்த்து
ஆனதோர் எட்டுநாள் அவணிருந்து
அப்பதியைவிட்டு நாமிப்பதிக்கேபுறப்பட்டோம்
வாகுபெறும்றவுலாமுன்வந்துநபிபாதம் பணிந்தேற்றி
வல்லதொருநாயன் நல்லுதவியாலே
வாள்கவே நீடூளிவாள்கவேஙயன்கிருபைஆமீன்

ஆகமகிழ்ந்தடுமைதனே அனுதினமும் காத்துரக்ஷித்தருள்வீர்
அடுமைமுகம்பாரும் முடுமைதனைத்தீரும்
அஞ்சுமடியேனீர் தஞ்சமென்றுளுமிறசூலே
படிபுகழும்மதினம்சொர்க்கம் பதியாசும்நீடுளிவாழ்க
பத்தமுறுதீனேர் கத்தனருளாலே
வெற்றிபெற்றென்னளும் நீடுளிவாழ்கவே ஆமீன்
குடிலமற்றும் ஓங்கிவளர்கொத்தமும் புரிசையும்கோட்டைகளும்
குன்றும்ல்நாளும் நன்றுய்க்கடந்து
கூடியேஎம்பகை நாடியேதானடந்தோம் (நன்ன)

## மதினம்விட்டு புறப்படல்.

விருத்தம்.

மதினநகரிருந்தொட்டகங்கட்டி வழிநடந்தோர்
நதிபெரும்காடுநகர் கடந்தேன்வெகுதூரஞ்சென்றும்
கதிபெரும் ஒட்டகக்காபிலாக்காரர் கனதுணையாகி
பதிபெறநாடியப்பாதையை கூடிநடந்தனனே

நடந்துவருகையில் நல்விருளாம்நடுச்சாமத்தின்முன்
கடந்துநடக்க இடப்கிடைக்காம லக்காடுதனில்
படர்ந்தமலேகளும் பால்காடுகளுமாகுமப்பாதையிலே
தொடர்ந்துநடக்கையில் துன்பம்வந்துற்றதைசொல்லுவேனே

தரு சங்கராபகரணம் துன்பக்கவி.

மதினம்விட்டுவெளியில் வருகும்போது
வந்தவரவதனை கொஞ்சமெடுத்துரைப்பேன்
அதினமானதூரந்தான்கடந்து
அடுத்தடுத்து காபிலாதொடுத்துவந்தோம்
துதிபெருகும் மதினநகரைவிட்டுவெகு
தூரஞ்சேன்றுமந்தபாதைதன்னில்
கதிபெருத இருட்டானதாலும்
கல்களானதாலும் செல்லும்வழியறியேன்
வழிபிசகிகால்கள்தவறி வீழ்ந்தேன்
வலுவானகல்களடிபட்டு வீழ்ந்தேன்

மொழியெவென்றால் முட்டுக்கால்முழந்தாள்
முன்காலிடுப்பு முழங்கை உள்ளங்கை
மழமிழென்றுரெத்தம் ஒழுகும்போது
கையால்வாரிவாரி காலில்பூசினேன்
அளவில்லாத நாயனுதவியல்லால் எனக்கு
ஆருதவிஒருவருந்தானுங்காணேன்
உதவியான துணைவரவர்களெல்லாம்
ஒட்டகங்களோடே போயினரே
ஏதுவிதம்கொஞ்சம் நடப்பமென்றால்
எனக்கெடுத்தடிகள் பெயர்த்துவைக்கொண்ணுதே
பொதியிருள்களங்கு விடிந்தபின்னேவழி
போவோமென்றால் ஒருவருந்துணையுங்காணேன்
விதிவசத்தை எவர்விலக்குவாரோஎன்று
விழுந்தழுதேன்நொந்து இடைந்தழுதேன்
அழுதழுது வழிதனிலிருந்துநான்
ஆருமற்றபருதேசியானேன்
பழுதுவந்தகாலில் கல்கள்பட்டு
பாங்குவிட்டெங்கும் வீங்கலாச்சே
முழுதுங்கை காலிடுப்பு வருத்தத்தாலே
முறையிட்டேன்நான் அழுதுகூவிட்டேனே
எழுதமுடியாததுயரத்தாலே எம்
மிறையவனைப்போற்றியேற்றினமே
விடிந்தபின்னேகொஞ்சம் நடப்பமென்றுதடி
ஊன்றியூன்றிமெள்ள நடந்தனனே
துடர்ந்துவந்தகாபிலாக்களெல்லாம் வெகு
தூரஞ்சென்றார் சென்றவீடமறியேன்
நடந்துபோகவென்றால் சக்தியில்லையக்கே
நானொருவன் தனியனுகினனே
இடம்பெரியகாடுமலையுமெங்கும் நெருங்கி
இருந்ததையாசிந்தை வருந்தினனே (தனனே)

விருத்தம் கலிப்பா

சிந்தைவருந்திதிகைத்து பதைபதைத்து
எந்தவிதமோவென்றேங்கி மனஞ்சலித்து

சொந்துவருத்தமதாகிநொம்பலப்பட்டேயழுது
அந்தமிலாநாயனருளென்றவணிருந்தேன்

கலிப்பா.

இருந்துமனம்வருந்தி யெண்ணம்மிகவாகி
அருந்தவொருசிறங்கை யன்னந்தண்ணீரில்லாமல்
வருந்திமனஞ்சலித்து வழிகூடியேநடந்தேன்
செறிந்தமலைதிடரும் சென்றங்கடுத்தனனே

தரு

இந்தக்காடுகள் மலைகடந்து நானெப்படியேபதிசேருவேன்
என்னைப்படைத்தநாயனே என்னுண்டவா
வந்ததுணைவர்ளும் முந்திநடந்திட்டாரே எனக்குதவியாக
வழியிலொரு துணை தானுங்காண்கிலனே என்னுண்டவா
சொந்தத்துணைவர்கள் அந்திநேரத்திலே காபிலாக்களோடே
தூரமெவ்வளவோ சென்றாரோவறியேன் என்னுண்டவா
சிந்தைகலங்குதே இதர்க்கென்செய்குவேன் நானிவ்வழிதனில்
சேரவொருநகர்தானுங்காண்கிலனே என்னுண்டவா
காடுமலையல்லால் நாடுநகரில்லையே வருந்திவருந்தியே
கலங்கியென்னுள்ளம் மலங்கிவாடுதையோ என்னுண்டவா
ஓடிநடக்கவும் கால்கைவசமில்லையே விழுந்துடைந்ததாலே
ஒருசிறங்கைநீர்தரவுமாளில்லையே என்னுண்டவா
தேடிநான்கூடிப்போகவொரு துணையும்என்கண்ணில்காண்கிலேன்
சிறந்ததாகமுமிகுந்ததென்செய்குவேன் என்னுண்டவா
ஆடிப்பறக்குதே எந்தன் தேகமெல்லாம் வெயிலாலுருகியே
அங்கமெங்கும் நீராகவோடுகுதே என்னுண்டவா
கால்கைவலிக்குதென் கண்கள்பூக்குதையோஎந்தனீரலும்
கருகுதேபசிபெருகுதென்செய்குவேன் என்னுண்டவா
வாலைநேரம்போய் மாலையாகுதையா நானிதற்கென்செய்குவேன்
வருவர்போவர்கள் ஒருவர் காண்கிலனே என்னுண்டவா
நாலுபுறம்மலை நடுவேகாடுகளோமையிருளுமாகுதே
நானிங்கொருதனியேனுமாகினனே என்னுண்டவா
கரடிபுலிசிங்கம்கரிகள் நாய்நரியோர்இருக்குமவ்விடமிது
கண்டாலென்னையின்று கொண்டுபோய்விடுமே என்னுண்டவா
திருடர்வரும்போகும்வழி யிதாகுமோநானதுவுமறிகிலேன்
உன்சித்தமிரங்கவும் மெத்தவேணுமே என்னுண்டவா

வேலைதனில்பொழுதடையலாச்சுதே இன்றிரவுஇருக்கவோர்
வேலாஞ்செடியடியிடத்தில் போயிருந்தேன் என்னாண்டவா

விருத்தம்.

வேலாஞ்செடியடியதனில் விடியுமளவும்விளித்திருந்து
கோலாகலன்தன்னருளதனால் குணக்குவெளுத்தேபொழுதெழும்
பாலைவனமும்பால்மிகுந்த காட்டில்பாதைதனைத்தேடி [பி
சாலஇறையேதுணையெனவே நடந்தேன்தனியேனாகவுமே.

தரு.

இந்தவிதிக்கென்னசெய்வேன் என்னாண்டவா
இந்தவிதிக்கென்னசெய்வேன்
இந்தவிதிக்கென்னசெய்வேன் எப்படிநடநடப்பேன்
ஏதுவிதமாய்முடியுமோ என்னாண்டவா
ஏதுவிதமாய்முடியுமோ
வந்ததுணைவர்களும் முந்திநடந்துபோயினர்
எந்தவிதமாகுமோ நானிந்தவழியறியேன் இந்தவிதி
பார்த்திடும்திசையெல்லாம் வேற்றுருவாய்த்தோணுதே
கார்த்திடநீயல்லால் ஆற்றவர் தானுள்ளோர் இந்தவிதி
காடுமலையுமல்லால் நாடுநகருங்காணேன்
ஆடித்துரும்புபோலே வாடித்தவிக்கலானேன் இந்தவிதி
ஊணும்உறக்கம்போச்சி உடலும்பாதியாச்சே
தோளுத்துலையுமாச்சே துணைவரில்லாமல்போச்சே (இந்த)
ஏறுவெயிலுமாச்சே வேர்வையொழுகலாச்சே
தீராப்பசிப்பிணியும் கூறுத்தவனத்தாலே (இந்த)
அழுதழுதுநடந்து வழிமுழுதுங்கிடந்து
எழுதவிதியிதென்று முழுதும்துயரத்தாலே (இந்த)
பகலெல்லாம்வெயில்களும் இரவெல்லாம்குளிர்காத்தும்
அகலாதிருந்ததல்லால் அடிமைக்குதவிகாணேன் (இந்த)
காபிலாக்கள்வந்தாலும் தாவிநடப்போமென்றால்
ஆவலிருக்குதேயெந்தன் கால்கைவசமில்லையே (இந்த)
அந்திவேளையாகுதே எந்தவிடஞ்செல்குவேன்
நொந்துமனதிடைந்தேன் சிந்தைதுயரத்தாலே (இந்த)
எத்தனைபிழைசெய்தாலும் அத்தனையுமேபொறுத்து
சித்தமிரங்கியுனை முற்றுங்காத்தருள்செய்வாய் (இந்த)

விருத்தம்.

அல்லும்பகலு மூனைத்தேடியடியேன் முறையிட்டழுவதெல்லாம்
வெல்லுமுயர்காதுகேள்க்கலேயோ வேந்தாஎந்தன்விதியிதுவோ
வல்லபிழைசெய்தடியேனை வாகாய்பொறுத்துன்கிருபைசெய்து
அல்லலகற்றி நல்வழிபிலாவதுனதுகடனாமே
கடனென்றிரைமேல்பாரமிட்டு காட்டில்தனியேநடக்கையிலே
இடமாயெழுந்தபொழுதடைந்து ஏகுங்காலமானதினல்
திறமாய்ஒருகல்பிளவடியில் சென்றுபுகுந்தங்கேயிருந்தேன்
குடபாலடைந்தகதிரவனும் குணக்கில்எழுந்துவிடிந்ததுவே.

தரு.

என்னபாவமோயறிகிலேன் என்றலையில் இந்தவிதியாச்சே
எப்படிமுடிந்திடுமோ இப்படிவருமென்றறியேனே
முன்னைநாளில்என்றலையில் மன்னனிட்டெழுத்தின்படிதானே
முடிந்துதென்றலையில்வந்துவிடிந்ததோ இதர்க்கென்செய்வேனே
பொழுதுவிடிந்தேயெழுந்துபோவோமென்றுநான் துயரத்தாலே
போறவழிபார்த்துப்பார்த்து தூரமாய்நடந்துசெல்லும்போதே
அழுதழுதுவழிநடந்து முழுதுமென்வருத்தமேன்சொல்வேன்
அங்கங்கேயிருந்தெழுந்தும் தங்கியேகிடந்தும்நடந்தேனே
பனியால்நனைந்துவாடிபகலும்வெயில் பொருக்கொணாதே
பாதைவழியொன்றுங்காணேன்ஏதுவிதமோயினியென்செய்வேன்
இனி நானிதர்க்கென்னசெய்வேன் என்னைப்படைத்தாளும்றஹுமானே
எந்தன்பிழைபொறுத்து உந்தனருளேதருமெங்கோனே [மானே
காலிலாக்கள்தாரைபார்த்து கண்டகண்டவெட்டமெல்லாஞ் சென் [றேன்
கண்கள்பஞ்சடைந்ததெந்தன் நெஞ்சமார்படைக்குதென்ன செய்
பாவியென்பிழைபொறுத்து பரகதியிலாக்குமிறையேனே [வேன்
பாதைவழிகண்டுசெல்ல ஆதியேஅநுக்கிரகம்செய்வாயே
பாலைவனந்தனிலிருந்து பாவியென்னையோர்நகரில்சேர்த்தி
பக்ஷம்வைத்துஎன்னைக்காத்து முத்திதந்தாளுமிறையோனே
இப்படிப்புகழ்ந்து இறையைஏகிவழிபோகையிலே அங்கோர்
ஏந்திழையாளங்கொருபெண் ஊர்ந்துஆடுமேய்த்திருக்கக்கண்டே [ன்

ஒப்புவமைதானுமில்லான் உதவியால்நானவரிடத்தில் சென்றேன்
யாவும்மிமோயாமோயாவென்று ஓதினேனம்மாது கூட்டிச்சென்
[றாள்
வெப்பகலபசிகள்தீர மிஞ்சியெழுந்தாகமகன்றிடவே
வேண்டமட்டும்தண்ணீர்தந்தார் ஏன்றமட்டும் நானுங்குடித்தே
[னையா
செப்புதர்க்கென்னால்முடியாது தியக்கமுமயக்கமுமாய்க்கிடந்தே
செய்பவழிதான்கடந்து பையமெள்ளவேதுலைகடந்தேன் [ன்
திப்பரவாயிறையருளால் துன்னிஉன்னியேதுலைகடந்து
துய்யகுறைதன்னருளால் உய்யுமறைப்பசில்வந்துசேர்ந்தேன்

விருத்தம்.

மிகுதுயரங்கள்பட்டு வீர அப்பாசில்சேர்ந்து
வெகுவிதமாயெங்கும்விருப்பமாய்ச்சுத்திப்பார்த்தேன்
தொகுதியாய்வந்தகாபிலாக்களும் துணையுங்காணேன்
அகுதிகள்போலயானுமவ்விடம் தனிவிருந்தேன்
இருந்தபின்னவ்விடம்தனில் இருக்கின்றமிசிக்கீன்மாரை
தெரிந்துநானவரைக்கூட்டி சேர்ந்தவணிருக்கும்போது
சிறந்திடும்மறுநாள்அப்துல் காதரும் காதர்பீவி
வருந்திய அவணில்வந்தவாறெல்லாம்தெரிந்துகொண்டேன்.

தரு சீர்வேள்வி.

வீறுஅப்பாசிருந்து மூவரும்ஒன்றாய்
மேவிவழிகள்கூடியே
ஏறுனகுவடுகளும் திடரும்கல்லும்
ஏறியேவழிநடந்தோம்
பாரானபெருமலைபோல் எவ்விடத்திலும்
பார்த்தறிந்தோமில்லைநாம்
தோறுதமலையருகேசெல்லும்போது
ஒருதுட்டன்வந்தெதுப்பட்டனே
வந்தவன்வழிமறித்து எங்களையெல்லாம்
வகைவகையாய் சோதித்து
விந்தையாயொரு காசுங்கிடையாமல்
வெறுத்தான்முகங்கள்கறுத்தான்

அந்தச்சமயமதிலே யாஷெய்குமிசிக்கினென்று
அறைந்தோம்மிகுதிகரைந்தோம்
சிந்தமுனிந்துகோபமாகி புலிசுமாப்பீசுக்குல்
மௌத்தென்று சீக்கிரமாயுரைத்தான்
இட்டசுப்பாபொதப்பு கம்பிளிபேறு
யெடுத்துக்கொண்டதுமல்லாமல்
திட்டமதாகப்பின்னும் ஒவ்வொருத்தராய்
சேரநிறுத்திச்சோதித்தான்
ஒன்றுமில்லாததினல் எங்களுயிர்
உய்யும்படிக்குதவினன்
சென்றங்கவ்விடம் விடுத்துவழிகள்
தேடிசீக்கிரமாய் நடந்தோம்
நடந்துசெல்லும்போது அங்ஙனே
பொழுதடைந்து நாங்கள் அக்கோரிடத்தில்
முடங்கிச்சுருண்டுகிடந்தோம்
குளிருங்காத்தும்மோதுவதேதுசொல்வேன்
விடியமட்டுங்கிடந்துபட்டபாடுகள்
மேலவன்தானறிவான்
தடியினுதாவாலே நடந்துவந்து
சப்ரவாதியில் சேர்ந்தோம்
சேர்ந்துதிசைகளெங்குமேதுணைவர்களைத்
தேடியேஓடினனே
சார்ந்தநம்மினத்தவர்க ளிவிடந்தனில்
தாஞேருவருங்காணேனே
காணுமலவ்விடந்தனிலிருந்துபின்னை
கஞ்சிக்குவழிபார்த்தோம்
பேணிஎம்பகைநாடி வழிகள்கூடி
பிறப்பட்டு தானடைந்தோம்
போகையிலிவர்கூட வழிநடக்க
போகாதுவருத்தங்களால்
வாகாயெனைத்தனியேவிட்டு
அவரெந்தவழிபோயினாறறியேன்
இந்தவிதமாய்த்தனியே வழிநடந்து
ஏகியோர்வழியருகே

சிந்தைவருத்தமுடனே பத்துக்களிடம்
சேர்ந்தங்கிருந்தனனே
இருந்தபின்னவரெனக்கு மனமகிழ்ந்து
ஏகபோகமாயன்னம்
திருந்தயிரண்டுநேரமும் பசிக்குணவு
செய்தங்கனுப்பினேனே
அளித்தார் பத்துக்கள் பெண்டுகள்
அவிடத்தில் அன்பாக வழிகூறி
செழித்தேஎம்பகு தரீக்கதனைக்கூடி
சென்றங்குதானடந்தேன்
படர்ந்தமலைகள் காடுகள் வெகுவிதமாம்
பாலைவனங்கள் தாண்டியே
இடந்தரும்எம்பகு நன்னகரமதிலே
ஏகனருளால் சேர்த்தினன்.

விருத்தம்.

எத்தினை துயரத்தோடே எம்பகு நகரஞ்சேர்ந்து
சுத்தியெத்திசையும்பார்த்தேன் துணைவர்களொன்றுங்காணேன்
இத்தினைதலம்விட்டாலு எம்பகுவிலிருப்பாரென்று
நத்திநானிருந்ததெல்லாம் நழுவிப்போனதுபோலாச்சே.

ஏன்னநான்செய்வேனென்று இடைந்திடைந்துருகிவாடி
மன்னவாயென்னைக்காத்து இம்மாநகர் தனில்சேர்த்தாய்
இன்னமுமெனைக்கார்ப்பாயென் றிறைவனைப்போற்றியேற்றி
தன்னிலேதுயரத்தாலே தனியேநான் புலம்பினேனே.

தரு.

ஏன் அவசரப்படுகிறாய் மனமே
இறையில்லையோ பெருந்தொல்லையோ சும்மா (ஏன் அவசர)
ஏன் அவசரப்படுகிறாய் சும்மா
எத்தினைசொன்னாலும் புத்திஉனக்கில்லை
வானமதிகண்டதாமரைபோல் முகம்வாடுறாய்
மனம்கோடுறாய் சும்மா (ஏன் அவசர)
வந்தவிதிவந்ததே இனி சிந்தைநொந்தாவதென்ன
அந்தமிலாதவன் எந்தவிதம்செய்வான்
அப்படியாகுமென்றெப்பியிராமலே (என் அவ)

எண்ணமறந்தனையே பெரும்எண்ணம்நினைந்தனையேநீ
நண்ணியிறையைப்புகழ்ந்திருந்தாலுனக்
கென்னகுறைவருமென்றறியாமலே (என் அவ)
வஞ்சகம்செய்ததெல்லாமுனை வந்துமிஞ்சிநெருங்கலையோ நீ
தஞ்சமென்றேயிறையோனைபணிந்திடில்
அஞ்சலகற்றியருள்புரிவானுன்னை (என் அவ)
பாலைவனம்வந்ததும் உந்தன்கால்கைபுடைந்ததும் அலங்
கோலமுடன்துயரப்பட்டதும் கெட்டதும்
சீலமுடனிறையோனறியானோ (என் அவ)
காலகாலங்களெல்லாமுலகினில்வாழ்வது தானிசமோ இந்த
ஆலமுடையவன் ஏவலல்லாதொன்றும்
ஆவதுமில்லை யழிவதுமில்லையே (என் அவ)
எப்படியானாலும் விதிப்படியப்படியேமுடியும்
துப்பரவானபிறையைப்பணிந்திடில்
துன்பமகற்றிடும் இன்பமிகுத்திடும் (என் அவ)

விருத்தம்.

இந்தவிதம்எம்பகுமா நகரிருந்துஎப்படியோ சித்தநகர்சேருவோமென்று, அந்தநகர்பாத்துஷாவிடத்தில்சென்று அழுதிஎன்துயரமெல்லாமவருக்குச்சொன்னேன், சிந்தைமகிள்வாகவென்னைக் கூட்டி செல்கசேவகனையழைத்துநன்றாய் செப்பினார்கள், விந்தையாய்மிசிக்கீன்மாருடனேகூட்டிவேகமதாய்சித்தநகர்க்கனுப்புவாயே.

அனுப்புமென்றரசன்சொன்ன அனுவாதம்கேட்டுநன்றாய்
எனைத்தலர்லிடத்தில்சேர்த்தி யேத்தினார்பத்தேமாரி
தனைகடல்தனிலோடிகரையது சேர்ப்பாயென்று
அனைத்தினும்கிருபைசெய்யும் ஆதியைப்புகழ்திட்டேனே.

நொண்டிச்சிந்து.

எம்பகுதனிலிருந்து, சம்பகுலேறியேசித்தநகர்சேரவென்றே; அம்பிகையிரும்பெடுத்தான், அக்ஷணத்தில் ஆலாத்திகளெடுத்து பாய்விரித்தார்; பெருங்கடலோரமதாய் சம்பகுபேணியேபாய்கொடுத்தோடையிலே; செறிந்திடரூபிக்கிலே, இரண்டாம்நாள்சேர்த்தினன்கரைதனில் நேர்த்தியாய், விடிந்தபின்பாய்கொடுத்து, அங்

இருந்துவேகமதாகவேயோடினனே; நடந்திடும்வேளையிலே, கச்சான்கால்நடுப்படவே வந்துகுறுக்கிடவே; ஓடிடும்சம்பகுதான், நேராகஓடாமலங்குவாடையினால்கூடியே; மனஞ்சலித்துபிறகடல், கொண்டுசென்றான்வெகுகண்டிதமாய்; இப்படிநான்காம்நாள், றுயிசிலேகியேயவ்விடத்திலிரும்புவைத்தான்; ஒப்புடன் கடல்காத்து, வந்தல்லாமல் ஓடவொண்ணாதுறையாடவொண்ணாது; எத்திசையிலும்காத்து, சுத்திசுத்தியேகமதாயடிக்கையில் போகாமல்; வெத்தியுடனே கடல்காத்து, அடித்திடவேவேகமதாய்பாயெடுத்தோடினனே; சித்தநகரைநாடியே, பாயெடுத்துஏகபோகமுடன் ஓடிச்சென்று; பத்தியுடன் ஒன்பதாம்நாளில், பாங்குடனே சித்தாகரையில்வைத்தான்; ஆவலுடன் தோணியிலிறங்கவென்றால் அப்பா அரைக்காசுமெந்தன்கையிலில்லை; தாவியேமிசிக்கீன்மார் கூட்டத்தில், தானுமொருவராய்க் கரையிறங்கி; நகருள்ளேபோகவென்றால், தீர்வைநன்றாகக்கொடுப்பதற்கொன்றுமில்லை; வெகுசனம்போகமட்டும், நானங்கேவெட்டவெளியில்மண்டியிட்டிருந்தேன்; அதிலொருஷெய்குவந்து, இம்மனிதனை அகற்றுமென்றேவாதல்பிறத்துவிட்டார்; இதுநல்லசமயமென்று, நகருள்ளேயேகினேனான் எங்கும்போயினனே; செப்பரும் நகரினுள்ளே, புகுந்தெங்கும் தேடினேனானெங்கும்கண்டிலனே; முப்படிநடக்கையிலே, தலைச்சேரிமூசைக்காசியுடையமருமகனும்; அவ்வையில்குஞ்சுமறைக்கார், ஹாஜியை அடுத்துக்கொண்டேன் கையைபிடித்துக்கொண்டேன்; செவ்வையாயென்துணைவரோடும், எந்தனையும்சேர்த்துவீரென்று நல்லவார்த்தைசொன்னேன்; நானுமவரும்கூடியே, வீதியெங்கும் நன்றாகத்தேடினோம்கண்டிலமே; பாநலங்கடல்கரையில், சென்றபோதுபக்கீர்முகம்மதுவும்மகுதூமும்; தானவனுதவியினால், இருபத்தியொன்றாநாள் சென்றபின்புதம்மில்கண்டோம்; ஆனதங்கையும்மங்கையும், மற்றுமுள்ள ஆடவர்களும் வந்து தேடிக்கொண்டார்; (நன்)

## சதகம்.

வல்லவனுதவியால் சித்தைமாநகர் பந்துக்களைத்தெரிந்து வாகாயவர்களுடன் இனியமொழிபேசியேமகிழ்வுற்றிருக்கும்நேரம், எல்லைதனிலெங்களை நீர்விட்டுபிரிந்துபோய் எத்தனைநாளாச்சுதிப்

போ ஏகியெளியேன்சென்றது இருபத்தொன்றுநாளாச்சுதென்றே யிசைத்தேன், தொல்லைவழிபிசகியேபோனதும்வந்ததும் துன்பங்களுற்றதெல்லாம் சொல்லுவீரெங்களுக்கென்னவவர் கேட்கவே துகைவகையதாயுரைத்தேன், எல்லைதனிலெந்தலையிலிட்டபடிமுடியுமென்றெண்ணியெண்ணித்திரிந்தேன் என்னையாண்டருள்புரியுமன்னவன் துணையல்லால்எவருமுண்டோசொல்லுவீர்.

விருத்தம்.

இப்படிப்பத்துநாளாயிருந்துபின் சித்தாவாமும்
தப்பிதமில்லாமூசைக்காசி தலாவிடத்தில்
செப்பியேநெருப்புக்கப்பலேறவே சீட்டுவாங்கி
நற்புடன்பயணமாகி நாங்களெல்லோரும்வந்தோம்

வந்தவணிருக்கும்போது வகைவகைவிருந்துசெய்து
சிந்தையில்மகிள்வதாகி சீக்கிரம்தோணியேற்றி
விந்தையாய்கப்பல்தனில் வேகமாயேற்றுமென்று
சந்தோஷமாயெங்களுக்கு சலாம்சொல்லித்திரும்பினாரே.

ஏறினோம்கப்பல்தனில் இருக்கவோரிடமுமில்லை
கூறியேஜனங்களெல்லாம் கூட்டங்கூட்டமதாய்ச்சேர்ந்தோர்
நேருஞ்சீருமில்லாத நெட்டூரஞ்செய்வாரென்று
சீரில்லாதவரைவிட்டு தீக்குழல்க்கருகிருந்தோம்.

தரு. இராகம் அலந்தோடி! பத்தமபத்தி.

ஓடினார் ஓடினாரே இரும்பெடுத்துப் புறக்கடல்வைத்து
ஓடினார் ஓடினாரே.

ஓடினார் சித்தநகர்விட்டே, ஓடினார் பெருங்கடல்வழிபோகையில்
கூடியேலம்லம்கரைதாண்டி
கூட்டிநெருப்புகளை மூட்டிமூளக்கியவர் (ஓடினார்)

நலமாய்விசைமுறுக்கி நாள்மூன்றுசென்றபின்பு
பிலமாமகாவாதல்கடந்து பின்னும்
சகர்முல்லா தனைக்கடந்தப்பாலே (ஓடினார்)

இருக்கத்தலங்களில்லா நெருக்கமிகவதாலே
பொறுக்கப்படாதஞூடும் பொங்கியெழுந்தசினம்
அங்கிகளாய்ப்பறக்க (ஓடினார்)

ஓடியேசெல்லும்போதங்கன் உதய்தாய்க்கரைகண்டேகி
தேடியேகரையெடுத்து சீக்கிரமாய்
தன்னோக்கி இரும்புவைத்து (ஓடினார்)
வேகமுடன்சரக்கை மிக்ககரையிறக்கி
வாகாய்மறுசரக்கை வங்கதனிலேயேற்றி
அங்கிருந்து மறுநாள் (ஓடினார்)
ஆளப்பெறுங்கடலும் அலைகளும்மலைகள்போலே
கோளிட்ட சுக்குசீருகொண்டு
குவடுமலைகண்டு கடந்தப்பாலே (ஓடினார்)
இடுக்கண்தவிர்க்குமெங்கள் ஏகனிறையருளாலே
அடுத்தவோரெட்டுநாளில் அதனில்கறையே
கண்டுபதனமாய் கொண்டுசென்று (ஓடினார்)
அரபுக்கடலைத்தாண்டி அதனிக்கரையில்வைத்து
விறகுதண்ணீர்முதலாய் விருப்பமுடனேயேற்றி
நெருப்புப்புகைகொடுத்து (ஓடினார்)
இருகரையுந்தெரியாது இரவும்பகலுமோடி
பருவரையும்பாதாளம் பாங்குடனேகக்கானே
நீங்கிடாமல் பிடித்து (ஓடினார்)
இப்படிப்பதினறுநாளுங் கடந்துசென்று
துப்பாவாய்பொம்பாய் தோன்றுங்கொடிமரத்தி
லேற்றும் விளக்கைத்தெரிந்தே (ஓடினார்)
காலம்விடிந்தபின்பு கரையிலடுத்துவந்து
சாலப்பெருக்குடைய சனங்களெல்லாங்கரையில்
சிணங்கொண்டிறக்கிவிட்டு (ஓடினார்)

விருத்தம்.

கரையிறங்கி பெம்பாய்நகரில்வந்து காசிஇசுமால் முசாபர்கானில், முறைமுறையாய் நாங்களவணிருக்கும்போது மூத்திதரும் ம்நபியிரசூல் மவுலூதோதி, பிரிசமுடன்ரொட்டிகொணர்ந்தளிப் பாரதைபேணியதைவாங்கிநன்றாய்புசித்துக்கொள்வோம், வரிசை பெறநாங்களவணிருக்கும்போது வந்தவகையதில்சிறிது மவுலு வேனே.

எல்லவர்களுமொன்றாகயிருக்கவோர்மனிதன்வந்து
அல்லறைக்குசேட்டுவீட்டில் மவுலூதுக்கழைத்தாரென்றார்
நல்லதென்றெழுந்துநாங்கள் நாடியேயவ்விடம்சென்றோம்
தொல்லைநாள்விதிவந்தென்னை தொடுத்திடத்தப்பாருண்டோ,

தரு.

என்னகாறணமிதுநானறிகிலேனே — இப்படிவந்த
    தேதுகாறணமிது நானறிகிலேனே
என்னகாறணமோ மன்னுநானறியேன் — இன்னம்துயரப்பட
    முன்னம்விதியிதுவோ (என்னகாற)

அல்லறைக்குசேட்டுவிட்டு மவுலூதுக்கெங்களையெல்லாம்
    அழைத்தாரன்னம் பொசிக்கச்சென்றோம்
நல்லதாக அன்னம் எல்லவர்களுக்கொப்பாய்
    நானும்பொசித்ததல்லால் வேறொன்றுந்தின்றிலேனே (என்)

எஷாஒருத்தானதிலே வசக்கேடாய்
    இறைந்திறைந்து எத்தனையோதரமாய்வயறுபோச்சே
பேசாதெழுந்தெழுந்து பிலமுள்ளமட்டுஞ்சென்றேன்
    கூசாதெழுந்துபோக கூடாதினியென்றலே (என்னகாற)

இருந்தயிருப்பில்வயறுபோச்சே எந்தன்கைகால்கள்
    இழுத்துவண்ணவலிக்கலாச்சே
தெரிந்தவிழிகள் குழியாச்சே செவியடைத்து
    சத்தங்குறைந்துகுன்றிப்போச்சே இனிஎன்னசெய்வேன்
    [என்னகாற)

அறிந்ததுணைவர்களெல்லோரும் பிரிந்துபிரிந்து
    அங்கங்கே சென்றிருக்கின்றாரே
பிறிந்திடாதெந்தன் தங்கையுடனேயானும்
    பித்தர்போலேமுளித்தோம் உத்ததுணையில்லாமல் (என்ன)

கைகள்நகங்கள்குளியாச்சே எந்தனுடைய
    கண்கள்பஞ்சடையவுமாச்சே
மையல்மயக்கமாச்சு வாந்தியெடுக்கலாச்சு
    மெய்யெல்லாம்வேர்வையோடி மிகுந்ததணுப்புமாச்சு (என்)

கண்டுகண்டென்துணைவர்களெல்லாம் எந்தனை
    கண்டுகறுத்தார் பயந்துவிறைவிறைத்தார்
இன்றுபயணமென்று வண்டிக்காரனையழைத்து
    எடுத்துமூட்டைகளெல்லாம்கொடுத்தப்புறம்போனார் (என்)

போனோரைப் பத்தேமாரியேத்தி மகுதூம்வந்து
    போவார்நாளை சுபுஹிலென்றார்
நானுஞ்சகோதரியும் நாடியவணிருந்தோம்
    ஆனபடியாகட்டும் அல்லாஉதவிசெய்வான் (என்னகாற)

இந்தவருத்தம்றண்டுநாளாய் சிந்தைவருந்தி
    இருந்தேன் பெருந்துயரத்தாலே

எந்தவிதமும் கல்விக்கோடுசேருவோமென்று
எப்படியோபத்தேமாரிக்கப்படி கூலிகொடுப்போம் (என்)

விருத்தம்.

ஏழையான்விசனமாகி இருக்கையில்பத்தேமாரி
நாளையான்பயணமென்று றெட்டியில் ஒருவன்வந்தான்
வேளையில்பயணமாகி விரும்பியெம்பிறையைப்போற்றி
ஆள்வதுகடனேயென்று ஆகலிக்கரையில்வந்தேன்.
சேர்ந்தவணிருக்கும்போது சிறுவுறுகொண்டுவந்தார்
ஊர்ந்தவன்கொண்டுவந்த ஓடத்தில் ஏறிச்சென்று
சார்ந்திடும்பத்தேமாரி தன்னில்நாமிருந்துகொண்டு
போந்திடும்வறலாறெல்லாம் புகலுவேன்புகலுவேனே.

தரு.

பெம்பாய்துறைவிடுத்து வெகுசிதமாய் இரும்பெடுத்து
அன்பாகவேவரும்போதினில் அல்லிபாக்காணம்
அபசிசஞ்சீராவென்னும் அணிமாநகர்தாண்டி
சுபமேவியகோவைமாநகர் தோன்றிநடந்தனனே
மாலுவான்கடந்தப்பாலுள மைவாடியுங்கடந்து
சீலமேவியரத்னகிரிசென்றே நடைகொண்டான்
தங்காமலேயோடிச்செல்லும் ஜல்திவழிபதிலே
இங்குறுலாவென்றேசெலேளும்எழின்மாநகர்கடந்தான்
பவுட்டாகிய அத்தர்சம்பங்கி பரிவாசங்கள்விளைக்கும்
குமிட்டாவென்னும் கொண்டிகண்டவன்கூடி நடந்தனனே
சாலைபெருஞ்சோலை இரும்பாலைகன்னற்சாலை
வேலைசெய்யும் மங்கலாபுறம் விரிப்பாய்க்கடந்தனனே
வட்டக்குளம்நெட்டக்கிரி வளமாநகரெல்லாம்
விட்டேகோட்டைமுக்காணதும் விரைவாய்க்கடந்தனனே
கண்ணனூர்தலைச்சேரியெனும் கன்மாநகர்தாண்டி
நண்ணுமையை இடக்காடுகள்நடந்தான் சென்றுதுடர்ந்தான்
வாகாகியவெள்ளியங்கிரி வளமாம்கொயிலாண்டி
ஏகியேஎலத்தூர் காதியு மிடமாய்க்கடந்தனனே
பாகலாகியதென்னைபுன்னையும் பளனங்களனிகளும்
மோகனமானசெங்கலாம்பலும் மூன்றுமேநிறைந்திருக்கும்
மாடமாளிகைகூடகோபுரம் மண்டபம் கடைத்தெருவும்
மேடைமேநிலைகோடுகோபுரம் வெகுவாய்த்துலங்கிடுமே

ஆர்ச்சள்பவர்துறைமார்களும் அனந்தவிதமுடையோர்
பரிவாகியஜனசேகரம் பாலைவநிகராகுமே
இருகாதமும்ஒருகாதமு மாயேகிவழிநடந்தே
துறையாகியகோழிக்கோடென்னுந்துறையில்கரைவைத்தான்
நன்றாகியகல்லிக்கோட்டை மாநகரில்கரையிறங்கி
வென்றியாய்க்கோடைதொடிதனிலே விரிப்பாய்வந்துசேர்ந்
[தோம்.

விருத்தம்.

வந்துமாகல்லிக்கோட்டு மாநகர்தன்னில்ச்சேர்ந்து
விந்தையாய்மைந்தருக்கு மிக்ககாகிதமனுப்பி
சிந்தையின்மகிழ்வதாகி சேர்ந்தவணிருக்கும்போது
எந்தனையழைத்துச்செல்க இயல்புடன்மைந்தர்வந்தார்
மக்களும்நானுமெந்தன் தங்கையும்மறுநாள்தன்னில்
மிக்கதோர்வண்டியேறி வேப்பூரில்வந்துசேர்ந்து
தக்கதோர்சீட்டுவாங்கி தாமணிவேளைபார்த்து
அக்கணந்தனிலேஅந்த றயில்வண்டியேறினோமே.

அகவல்.

வேப்பூரிருந்து மிக்கதோர்வண்டிகள்
ஆப்பீசுவிட்டு அசைந்தசைந்தோடி
திடமுடன்கடந்து சேதுவென்றோதும்
கடவண்டிகடந்து கணல்மிகமூட்டி
திடப்படவோடி சென்றனராங்கே
பரப்பனங்காடி என்னுமாப்பீசில்
வந்தவணிருத்தி வகைவகையாக
சிந்தையில்மகிள்ந்து சீக்கிரமிறக்கி
ஏற்றியேயவ்விடம்விட்டு ஏகமாயோடி
தோற்றியேதாணூர் ஆப்பீசில்வந்தான்
பருவதமாக பாங்குடனோட
திருவப்பாண்டி டேஷனில்வந்தான்
யெத்திறமுடனே யேற்றியுமிறக்கியும்
குத்திப்புறத்தில் கொண்டுசென்றனனே.

நின்றுபின்னவ்விடம் நிமிஷத்தில்விட்டு
வென்றியாய்கூட்டு மொக்கார்கடந்து
எட்டாறுகூடி யேகுங்கறையது
பட்டாம்பியிலே பாங்குடனிறுததி
வாகாய்மனிதரை வகைவகையேற்றி
போகும்ஜனங்களை போகவேயிறக்கி
திறமுடனேடி சென்றனனங்கே
சொறவண்ணூர்ஸ்டேஷன் தோற்றியேவைத்தான்
பலபலதேசம் செல்பவரெல்லாம்
நலமுடனிறக்கியும் நன்றாகயேறியும்
வெற்றியதாக வேகமாயோடி
ஒற்றப்பாலத்தி லுகப்புடன்வைத்தான்
கூடியேநடந்து கொண்டதோர்லக்கிடி
நாடியேஸ்டேஷனில் நன்றாகவைத்து
ஏற்றியுமிறக்கியு மின்பமுடன்சென்று
தோற்றியேபறளியில் தொகுதியாய்வைத்து
மாற்றம்வண்டி வருகிறவரையிலும்
வேற்றொருறயிலில் விரும்பிநின்றதுவும்
கெளக்கன்வண்டி கிளர்ந்துபோனபின்
முளக்கமாய்நெருப்புகள் மூட்டியேயோட்டி
ஓலவக்கோடெனு முகந்தஆபீசில்
நலமுடனெங்களை நாயனுதவியால்
இறக்கிவிட்டதின்பின் னேகியப்புறத்தில்
திறத்துடன்நகரம் சேரவேநாடி
விரைவுடன்வண்டி வேகமாய்ப்பிடித்து
துருசாய்நடந்து துணையுடன்வரவே
வரும்போதெந்தன் பந்துக்களெல்லாம்
பிரிசமாய்வந்து பிடித்தெனையணைத்து
யேற்றமாய்வந்தவர் எதிரெதிராக
தோற்றிடவந்தவர் சோபனமாக
வந்தவந்தோர்க்கு வகைவகையாக
ஏந்தனிறைசலாம் எடுத்துநானிசைத்தேன்

பிரத்தியுஞ்சொல்லி பின்னுமெனக்கவர்
உறுதியாய்சலாம்சொல்ல உரைத்தேன்நான்பிரதி
எற்றியேயவண்டியில் எனையவர்நடந்தும்
ஆற்றைக்கடந்து அன்புடன்வருகையில்
எற்றமாய்வெகுபேர் எதிராகவந்தார்
தோற்றியேயவர்க்கு சோபனஞ்சொன்னேன்
இப்படிவெகுசனம் என்வரவறிந்து
ஒப்புடன்தேடி உகந்தவர்வந்தார்
நானுமவர்களும் நன்றாகக்கூடி
தேனும்பாலும்போல் சேர்ந்தனன்மனையில்
ஈனமிலாதா னிறையருளாலே
மானிலமகிழஎன் மனைதனில்சேர்த்தான்
அந்தமிலாதா னாதிதன்னருளால்
எந்தனைமனையதனி லின்பமாய்ச்சேர்த்தான்
ஆளுமிறையே அடியேன் பிழைபொறுத்து
வாழ்விருபதியிலும் வாழ்கநீயருள்செய்வாய்
நாளும்நாளும் நபிஷபாஅத்தில்
வாழ்கவேநாளும் வரமருள்புரிவாய்
ஏழையென்பிழையெல்லாம் இன்னமும்பொறுத்து
ஊழிஊழிவாழ்க உதவிசெய்யாமீன்.

முற்றிற்று.

---

புதுநகரம் அ. மீருசாகிபு அவர்கள் குமாரர்
முகம்மதுஹசன் நாவலர் அவர்களால் நமது
முகம்மது முஸ்த்தபா சல்லல்லாஹு அலைஹிவசல்லம்
அவர்கள்பேரில் பாடிய சிலபதங்களும்
ஷை யூரில் மரைபட்ட மலங்கொலிபேரில் பாடிய சில
பாடல்களும்.

## வெண்பா.

முத்தாயுதித்ததிரு முஹம்மதுறசூல்நபிமேல்
சித்தாகவேயுலகில் செய்தோர்உத்தாறம்
காறணத்தின்காட்சி கவியாகவேயுரைக்கும்
பூறணமுஹம்மதுசன் போற்றி

மாத்தாடப்பா என்ற மெட்டு.

(பல்லவி)

செய்தேன்வந்தனம்யானே செய்திறசூல் (செய்)
செய்தேன்வந்தனம்யானே செம்மல்முஹம்மதர்க்கு.

(அனுபல்லவி)

வய்யகந்தனிலபூபக்கர் சித்தீக்கானோர்க்கும்
துய்யோன்மரை தவறு துலங்கும் உமர்ஈனோர்க்கும் (செய்)
சதுர்மரைகோர்வைசெய்த உதுமானுமெய்யரோர்க்கும்
இதமாயிதுல்துல்வாசி எருமலிபுலியோர்க்கும் (செய்)
கர்ப்பழியாதகன்னி பாத்திமாபீவியோர்க்கும்
நர்ப்புடன்பெற்றெடுத்த நன்அசன்உசேனோர்க்கும் (செய்)
சக்கறம்போல்சூடும் அசுகாபிமார்களுக்கும்
மிக்கஒலிகள்மேலாம் முகய்யத்தீன்மேன்மையோர்க்கும் (செய்)
நாகைநகரில்செங்கோல் நல்வர்மீரான்ஒலிக்கும்
வாகாபெரும்பரீது வரிசைஒலியானோர்க்கும் (செய்)
இன்னம்ஒளலியாக்கள் அம்பியாம்மார்களுக்கும்
சொன்னேன்முகம்மதுசன் சோதிசபையோர்களுக்கும் (செய்)

மைலவடி மெட்டு.

(பதம்) பல்லவி.

நபியே திருப்பாதமலரடி தாரும் (நபியே)

அநுபல்லவி.

கீம்முமதினு புகழும் ஆமினு
கருவிலமைத்தே படைத்தானே ஆதி (நபியே)
அப்துல்லாபாலா அருள்கெரிசிலா
அடியேனக்கண்ணாரும் மறைக்கனுகூலா (நபியே)
மங்கிரிகுடையே தங்கிடுமுமையே
மங்கையருபிசா மணம்புரிநேசா.
குறைபிசிலுதித்து அரசாகத்தரித்து
அரசுகடந்தேக தொடுறைத்தோரே.
காட்டின்மான்பிணையை மீட்டுவீர்துணையே
குபிரோர்முன்னமே வருத்தினீர்மதியே.
மாணிலம்திகழ மாணிடர்புகழ
முகம்மதுசன்மொழிக் கருள்தாரும்.

பாலாவிசேகம் மெட்டு. பல்லவி.

நாயகமேநான்பணிந்தேன் நானிலத்தரசாண்டவர்
நான்மறைதனைக்கொண்டவா
நாதர்முகம்மதென்றவா
நேசமாயிவந்தென தாசைபுரிந்திட
தேசிகரையுங்கள் மீதில்துதித்த நன் (நாய)
மாமயிலின்வேசமுற் றகிமாத்தில்நின்றவா
மர்தாமீறுநீன்றவா
மன்னரப்துல்லாபுதல்வா
முங்கர்நகிரவர் பங்கஞ்செயாமலே
எங்குந்துணைசெய்ய இங்குஉரைத்தனன் (நாய)
நல்லாய்குபிரை வென்றீர்புவியில் சென்றீர்மகருஜ்லே
நான்கலிமாதனையுண்டவா
நானிலத்தோர்க்காய்விண்டவா
நாளைமகிசரிவேளையிலேஇந்த
ஏழையைரெச்சிக்க தாளைபணிந்தனன். (நாய)
நாதர்ஜிமிரிலோதும்வகியே நபமிகுந்துபூண்டவா
நாதாநிதம்சென்றவா
நாணன்ஜாகிலேவென்றவா
நேயன்முகம்மது வாயின்உசேனவன்
நேசமாய்பாடினேன் வாசமலர்ப்பெற (நாய)

பதம்.

வாப் விபனசந்திரபாலன் என்றமெட்டு.

புதுநகரில் அடங்கிய மலங்கோவிமேல் பாடிய பதம்

இலங்கிதுலங்குப்புவியே யிரைபுகழும்மலங் துஓவி ... ஏகஇல
சரி இகாமும்பக சகாமும்புவி பகாவேபுது நகரடங்கிய ஏகஇல
துஹைறு.

கன்றிடாபசுமடுவில் கறந்தனகொருபடிபால்
காறணத்தால்
நின்றிடுங்கல்லொன்றின்பால் நிகழ்த்திஞெ ஞருவன்சென்று
நிய்யும்பூத்தால்
சரிஇவறெனஓவியே மனப்பேசரியெனவினவ
சாற்றியேசில பூத்திருந்திட நேற்றியேபவ போற்றிடப்புவி இல
து..கறு.

பாதியாம்யிரவுதனில் பண்டொருவர்க்கேகனவில்
பகர்ந்தசேதீ
ஜோதியாம்யெரும்பின்தாரை ஜொலிக்குமிடம்சேர்க்குமென
சொன்னகியாதீ
பதிபினிலதுகாண பெரும்மதிநிரமதுதோண
கண் டிரையிடனதி விரைவினில் துஆ
முறையிடச்கபூ றுமைதொனிவர இ
துகைறு

மதுறுஸ்பங்காளமயிசூர் மற்றுமுள்ளமலபார்தாஞர்
ஆதிரேும்மதுரைஞகூர் ஆற்றாரீரோடுசேலம்ஆம்பூர்கிஎ...
மாந்தரிவரைத்தேடி வரும் வேந்தர்கோடாகோடி
மங்கைமாருகள் பால்ச்சோருகள்தினம்
தோரும்பங்கிட சேருமித்ததி இல
தொகைறு.

மானிலிவர்காறணங்கள் மானிலத்தோருரைக்கமட்டடங்கா
இன்னியர்முகம்மதுசேன் இயம்பியகவியிலுமே கட்டடங்கா
மக்பறுவென்றும்துலங்க இரை அக்பரின்தோணி முழங்க
பெரும்மகிபெற எனும் மிகபாத்திலே
சுகபதியிலே அக மகிழச்செய்.

முற்றிற்று.